ஸ்ரீ:.

ஸ்ரீமதே ஸூநீத்ருஸிஹ்மவாதப்ருஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 9.] ஸித்தார்த்தி௵ சித்திரை மீ [ஸஞ்சிகை 7.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரதவளமம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

**புருஷ ஸூக்தார்த்த சிந்தனை**

முத்கலோபநிஷத் புருஷஸூக்தார்த்தத்தைப் பின்வருகிற படி மேலும் விவரிக்கின்றது. [“அத தஸ்யைவ முத்கலோபநிஷதி புருஷஸூக்தஸ்ய வைபவம் விஸ்தரேண ப்ரதிபாதிதம் । வாஸுதேவ: இந்த்ராய பகவாநுபதிஶ்ய, புநரபி ஸூக்ஷ்மஶ்ரவணாய ப்ரணதாய இந்த்ராய பரமரஹஸ்யபூதம் புருஷஸூக்தாப்யாம் உபாதிஶத் । யோயமுக்தஸ்ஸ புருஷ:, நாமரூபஜ்ஞாநாகோசரம் ஸம்ஸாரிணாமதிதுர்ஜ்ஞேயம், விஷயம்விஹாய க்லேஶாதிபி: ஸம்க்லிஷ்டதேவாதிஜிஹீர்ஷயா ஸஹஸ்ரகலாவயவகல்யாணம், த்ருஷ்டமாத்ரேண மோக்ஷதம், வேஷமாததே । தேநவேஷேண பூம்யாதிலோகம்வ்யாப்ய, அநந்தயோஜநமத்யதிஷ்டத் । புருஷோ நாராயண:, பூதம் பவ்யம் பவிஷ்யச்சாஸீத் । ஸவேஷ,ஸர்வேஷாம் மோக்ஷதஶ்சாஸீத் ।

ஸர்வஸர்வஸ்மாச்ச அதிஜ்யாயாந் | தஸ்மாஜ்ஜ்ஞேயோऽபி ஜ்யாயாந் | மஹாபுருஷ: ஆத்மாநம் சதுர்தா க்ருத்வா, த்ரிபாதேந பரமே வ்யோம்ந்யாவிராஸீத் | இதரேண சதுர்த்தேந அநிருத்தநாராயணேந விஶ்வாந்யாஸந் | ஸ ச பாதநாராயண:, ஜகத்ஸ்ரஷ்டாரம், ப்ரக்ருதிம் (புருஷஞ்ச) அஜநயத் | ஸ: (விராட்புருஷ: ஹிரண்யகர்ப:) ஸர்வகார்யஸ்ய ஸ்ருஷ்டிகர்மண்யஜ்ஞவாந் | ஸோऽநிருத்தநாராயண:, தஸ்மை ஸ்ருஷ்டிம் உபாதிஶத் | "ப்ரஹ்மந்! தவேந்த்ரியாணி யாஜகாநி த்யாத்வா, கோஶபூதம் த்ருடக்ரந்திம் கலேவரம் ஹவிர்த்யாத்வா, மாம் ஹவிர்புஜம் த்யாத்வா, வஸந்தகாலம் ஆஜ்யம் த்யாத்வா, க்ரீஷ்மம் இத்மம் த்யாத்வா, ஶரத்ருதும் ரஸம் த்யாத்வா, ஏவம் அக்நௌ ஹுத்வா, அங்கஸ்பர்ஶாத், கலேவரம் வஜ்ரம் ஹீஷ்யதே, தத:, ஸ்வகார்யாந் ஸர்வப்ராணிஜீவாந் ஸ்ருஷ்ட்வா, பஶவ: ப்ராதுர்பவிஷ்யந்தி, (தாந் ஜீவாந் ஸ்ருஷ்ட்வா) தத: ஸ்தாவரஜங்கமாத்மகம் ஜகத்பவிஷ்யதி | ஏதேந ஜீவாத்மநோர்யோகேந மோக்ஷ ப்ரகாரஶ்ச கதித: இத்யநுஸந்தேயம்"]

இதனுடைய ஸமுதாயார்த்தமாவது: முத்கலோபநிஷத்தில் புருஷஸூக்தத்தினுடைய வைபவமானது விஸ்தாரமாக ப்ரதிபாதிக்கப்பட்டது. ஸ்ரீ வாஸுதேவனென்னும் பரம புருஷன், ஸூக்ஷ்மார்த்தத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று, தன்னுடைய திருவடிகளில் வணங்கிநின்ற இந்த்ரனுக்குப் பரம ரஹஸ்யமான ஸ்வவிஷய ஜ்ஞாநத்தை இரண்டு பாகத்துடன் கூடிய புருஷஸூக்தத்தின் மூலமாக உபதேசம் செய்தருளினர். அந்தப் பரமபுருஷன் க்லேஶாதிகளுடன் கூடிய தேவாதி ஶரீரங்களை முற்றிலும் ஒதுக்கத் திருவுள்ளம் பற்றினவனாய், ஸம்ஸார மண்டலத்துக்கு முற்றிலும் வாஹ்யமாய் நின்றதும், நாமரூபங்களுடன் ஸம்பந்தப்பட்ட இந்த்ரியஜந்ய ஜ்ஞாநத்துக்கு அகப்படாததும், ஸம்ஸாரிகளால் மிகவும் கஷ்டத்தால் அறியக்கூடியதும், ஸஹஸ்ர கலைகளுடன் கூடியதும், கல்யாணதமமானதும், தர்ஶநம் செய்தவர்க்குத் தத்க்ஷணமே மோக்ஷப்ரதமாயிருப்பதுமான ஒரு திவ்ய ஶரீரத்தை ஸ்வீகரித்தார்; அந்தத் திருமேனியுடன், பூமி முதலான ஸர்வலோகங்களையும் வ்யாபித்து நின்றார்; இன்னும் அந்தயோ

ஜங விஸ்தாரமாக அந்த லோகங்களை அதிக்ரமித்தும் நின்றார். நாராயணனெனப்பட்ட அந்த மஹாபுருஷனே, த்ரிகால வர்த்திகளாய் நின்ற ஸர்வ வஸ்துக்களும் ஆனார்; யாவர்க்கும் அவரே மோக்ஷப்ரதன். அவர் ஸர்வோத்க்ருஷ்டமான மஹிமையுடன் கூடினவர்; அவர்க்கு மேலானவர் எவரும் இல்லை. மஹாபுருஷன் தன்னை நான்கு பாகமாகச் செய்துகொண்டு, மூன்று பாகத்துடன் பரமபதத்தில் இருக்கின்றார்; அநிருத்த நாராயணனெனப்பட்ட நான்காவது வ்யூஹத்தால் இந்த ப்ரபஞ்ச ரூபமாகப் பரிணமித்தார். அந்த நாராயணன் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியை உத்தேசித்துத் தன்னிடத்தினின்றே விராட் எனும் ப்ரக்ருதியையும், விராட் அபிமானி புருஷனான ஹிரண்யகர்ப்பனையும் ஸ்ருஷ்டித்தார். ஸம்ருத்த் சரீரத்துடன் கூடிய சதுர்முகன், ஸ்ருஷ்டி கர்மத்தை அறிந்துகொள்ளவில்லை. அதனிமித்தம், அநிருத்த நாராயணன் அவர்க்கு அக்கர்மத்தை உபதேசித்தார். "ப்ரஹ்மந்! உமது இந்த்ரியங்களை யாஜகர்களாயும், த்ருடமாகக் கட்டப்பட்ட உமது சரீரமாகும் அண்டத்தை ஹவிஸ்ஸாகவும், அந்த ஹவிஸ் ஸமர்ப்பணத்துக்கு உத்தேச்யனாக என்னையும், வஸந்த க்ரீஷ்ம சரத் காலங்களை ஆஜ்ய இத்ம புரோடாசங்களாகவும் த்யானித்து ஹோமம் செய்யும் பிறகு உமது சரீரம் உமது ஸ்பர்த்யானத்தால் த்ருடப்படும்; அதனின்று ஸர்வ ப்ராணி வர்க்கங்களும் உம்மால் ஸ்ருஷ்டங்களாகும்; மற்றவைகளும் உமது ஸ்ருஷ்டியாகவே ஆவிர்ப்பவிக்கும். இந்த ப்ரகாரம் சராசரரூப ஸர்வ ஜகத்தும் உண்டாகும்." என்று இவ்வண்ணம் உபதேசம். இந்த ஆத்ம ஸமர்ப்பணரூப யஜ்ஞத்தினுடைய உபதேசத்தால், பகவானுக்கும் ஜீவனுக்கும் உள்ள ஸம்பந்த ஜ்ஞானமும் உபதேசிக்கப்பட்டதாயிற்று. மோக்ஷோபாயமும் சொல்லப்பட்டதாயிற்று என்று யோசிக்கத்தக்கது.

முக்திகோபநிஷத்தானது சங்கராசார்யருடைய காலத்துக்கு முற்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது. அதில், ‘ப்ரஹ்ம, தாபத்ரயாதீதம், ஷட்கோச விநிர்முக்தம், ஷடூர்மிவர்ஜிதம், பஞ்சகோசாதீதம், ஷட்பாவ விகாரசூந்யம், ஏவமாதி ஸர்வவிலக்ஷணம் பவதி,’ என்று, அத்வைத ப்ரக்ரியையில் ப்ரஹ்மத்தைச் சொல்லி, மேற்குறித்த தாபத்ரயாதிகளுடைய

‘யொமெந வாஜ வாமாஷொ ஜீவொஹவதி’ என்றும் சொல்லப்படுகிறது. பூர்வ பாகத்தில் புருஷ ஸூக்தார்த்த விவரணம், பாஞ்சராத்ர ப்ரக்ரியையில் செய்யப்பட்டது. ஶங்கராசார்யர் பாஞ்சராத்ர ஸம்ப்ரதாயத்தில் ஏகதேசாம்சத்தைக் கண்டிக்கின்றார். ஆதலால் பாஞ்சராத்ராத்வைதிகள் அவருடைய காலத்துக்கு முற்பட்டவர்களென்று யோசிக்கின்றோம். அவர்களுடைய கோஷ்டியில், முத்கலோபநிஷத்தும் ப்ரமாணமாக அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் ‘வதாஹி-ஸ்ரு வதாஹி-ஸ்ரு அாஹ்யாம் வம்வஹிரெவவ । ஹுரிபதெவவாநஅ-ாஹ்யாம் ஸஜெவிஷணாஃ வூஸீஷதா ॥’ என்கிற பாரத ஶ்லோகார்த்த விவரணத்தை ஸங்கதமாக முத்கலோபநிஷத் செய்வதாக யோசிக்க இடமுண்டு. இந்த யோசனையில் முத்கலோபநிஷத் ப்ராசீநமாயிருக்கவேண்டும்.

**ஏகாந்திகள் மதம்.**

இனி, ஸாத்வத ஶாஸ்த்ராரம்பத்தைப்பற்றி மஹாபாரதத்தில் வெளியாகும் சில இதிஹாஸங்களை ஸங்க்ரஹிக்கின்றோம். மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலஸ்த்யர், புலஹர், க்ரது, வஸிஷ்டர் இந்த ஏழு ருஷிகள் ஸப்த சித்ர ஶிகண்டிகள் என்று க்யாதி யடைந்தவர்கள். அவர்கள் ஸத்யதர்ம பராயணர்கள்; இந்த்ரிய வஶ்யமுள்ளவர்கள்; இவர்கள் மஹாமேரு பர்வதத்தின்கண், ஏகமதிகளாகப் போந்து, ‘வெதெஷுதாஹி-ஸூதம்’ என்கிறபடியே, ஸர்வவேதாநுஸாரியாகவும், உத்தமமான லோக தர்மங்களுடன் கூடியதாகவும் உள்ள இந்த உத்தமமான ஸாத்வத ஶாஸ்த்ரத்தைச் சொன்னார்கள்; லோகாநுக்ரஹத்தின் பொருட்டுத் தத்வ ஹிதங்களை யோசித்து, ஶாஸ்த்ரத்தைச் செய்தார்கள்; அங்கே தர்மார்த்த காமங்களும் மோக்ஷமும் விவரிக்கப்பட்டன; தேவலோகத்துக்கும் பூமிக்கும் பொருந்தியபடியே பல மர்யாதைகள் ஏற்படுத்தப்பட்டன. அந்த ருஷி ஶ்ரேஷ்டர்கள் ஸர்வலோகநாதனை நாராயணனை உத்தேசித்து, ஆயிரம் தேவ வர்ஷங்கள் தபஸ் செய்தார்கள்; அதன்பிறகு பகவதாஜ்ஞையை முன்னிட்டுக்கொண்டு ஸரஸ்வதி தேவியானவள் லோகஹிதத்தை இச்சித்தவளாய் அவர்களுடைய சரீரங்களில் அநுப்ரவேசித்தாள். அதன்மேல், விலக்ஷணமான ஶப்தார்த்தஹேது ஸமந்விதமாய்,

அந்த முக்யமான மாஸ்த்ரமானது ருஷிகளால் ப்ரவர்த்திப்பிக்கப்பட்டது ப்ரணவ ஸ்வர பூஜிதமாக, அது ருஷிகளால் மஹா காருணிகனை புருஷோத்தமனுடைய ஸ்தானத்தில் படிக்கப்பட்டது. அதன்பேரில் ப்ரஸந்நனை பகவான் ருஷிகளுடைய இந்த்ரியங்கட்குத் தெரியாதவனுய் நின்று, "லோகஹிதத்தின் பொருட்டு ஒரு லக்ஷம் ஸ்லோகங்க ளடங்கிய இந்த மாஸ்த்ரத்தை நீங்கள் செய்தீர்கள். ஸர்வலோக தந்த்ரங்கட்கும் தர்மங்களுக்கும் இது ப்ரமாணமாகும்; இது ருக், யஜுஸ், ஸாம, அதர்வாங்கிரஸ் முதலான வேதங்களை அநுஸரித்தது. எவ்வண்ணம் ப்ரமாணநுகுணமாக எனது ப்ரஸாதத்தினின்று ப்ரஹ்மாவும், எனது கோபத்தினின்று ருத்ரனும், ப்ரக்ருதியினுடைய ஸப்த விகாரங்களினின்று நீங்களும், ஸூர்ய சந்த்ரர்கள், வாயு, பூமி, ஜலம், அக்நி, நக்ஷத்ர கணங்கள், ஸர்வப்ராணி வர்க்கங்கள் முதலானவைகளும் என்னல் ஸ்ருஷ்டிக்கப்பட்டனரோ, எவ்வண்ணம் ப்ரமாணநுஸாரிகளாய், ப்ரஹ்மவாதிகள் ஸ்வாதிகாரங்களில் நிலைக்கின்றனரோ, அவ்வண்ணம் இந்த உத்தம மாஸ்த்ரமும் ப்ரமாணமாக இருக்கும்; இது என்னுடைய ஆஜ்ஞை; ஸ்வாயம்புவமநு இதைக்கொண்டு தர்மங்களை ஸ்தாபிப்பர். இனி உண்டாகப்போகின்ற உமநா ப்ருஹஸ்பதி முதலானவர்களும் இந்த மாஸ்த்ரத்தையே சொல்லப்போகின்றனர். பிறகு வஸு எனும் ராஜன் ப்ருஹஸ்பதி மிஷ்யனுகி, இந்த மாஸ்த்ரத்தை அடையப்போகின்முன். அவன் எனது பக்தனுய், என்னேயே ஸதா த்யாநித்துக்கொண்டு, தனது ஸர்வக்ரியைகளையும் இந்த மாஸ்த்ரத்தை அநுஸரித்தே செய்வான். ஆகையால் ருஷிகளே! உங்களுடைய இந்த மாஸ்த்ரமானது மாஸ்த்ரங்களுக்குள் உத்தமமானது. அந்த வஸு என்பவன் ராஜ ஸ்ரீயுடன்கூடி, மஹாத்மாவா யிருப்பன். அவன் இறந்தவுடன், இந்த மாஸ்த்ரம் அந்தர்தாநத்தை யடையப்போகின்றது" என்று, அத்ருஸ்யனுய் நின்ற புருஷோத்தமன் ருஷிகட்கு உரைத்து விட்டுப்போனுன்.

ப்ரஜாபதியினுடைய மாநஸ ஸூதர்களான ஏகதர் த்விதர் த்ரிதர் என்பவர்கள், தங்களுடைய ஸ்ரேயஸ்ஸாதநத்தை உத்தேசித்து, உத்தரதிக்கை நோக்கிச் சென்றனர்; அங்கே மேருபர்வதத்தின் வடக்கே க்ஷீராப்தியின் அருகே, ஒரு ஸ்தாந விசேஷத்தில், நாலுறு ஸம்வத்ஸரம் வரையில், அந்த மஹான்கள், ஸநாதநனும், வரதனும், ஸர்வதேவாதி ராஜனுமான நாராயண

னைத் தர்ஶிக்க வேண்டுமென்று தபஸ் செய்தார்கள். தபஸ்ஸின் முடிவில், அவர்கள் கேட்கும்படி அசரீரி வாக்கு உண்டாயது:— “நீங்கள் எனது பக்தர்களாய் எனைத் தர்சிக்கவேண்டு மென்று நன்கு தபஸ் செய்தீர்கள். க்ஷீராப்தியின் வடபுறத்தில் மஹாப்ரகாசத்துடன் கூடிய ஶ்வேதத்வீபம் இருக்கின்றது. சந்த்ரனைப் போன்ற ப்ரகாச யுக்தர்களாய், நாராயண பரர்களாய், புருஷோத்தமனிடம் ஏகாந்த பக்தர்களாய், அந்த ஸ்தாநத்தின்கண் புருஷர்கள் பகவானிடம் ப்ரவேசிக்கின்றனர். அவர்கள் இந்த்ரிய ஜய முள்ளவர்கள்; ஆஹார மற்றவர்கள்; ஸுகந்தத்துடன் கூடினவர்கள். நீங்கள் அவ்விடம் சென்றால், எனது ஆத்மப்ரகாசம் உங்கட்குக்கிடைக்கும்.” என்கிறபடியே அந்த சப்தத்தைக் கேட்டு, ப்ரஹ்ம புத்ரர்கள் மேல் விவரித்த ப்ரதேச விசேஷத்துக்குச் சென்றார்கள். உடனே அவர்களுக்குக் கண்கள் பார்வையை இழந்தன; ஆனால், தக்கபடியே தபஸ்செய்யாதவர்க்கு அந்த க்ஷேத்ரம் தர்சிக்கத்தகாததென்று அவர்கட்குப் பகவத் க்ருபையால் ஜ்ஞாந முண்டாயிற்று. மறுபடி நூறு வருஷம் அவர்கள் தபஸ்ஸில் நிலைத்தனர். பிறகு, சந்த்ரப்ரகாச யுக்தர்களாய், ஸர்வ லக்ஷணங்களுடன் கூடினவர்களாய், கீழ்த்திசையையும் வடதிசையையும் நோக்கிக்கொண்டு, ஸதா பகவத் த்யாநத்தில் நிலைத்தவர்களாய், மஹாத்மாக்களை ப்ரஹ்ம புத்ரர்கள் தர்சித்தார்கள். அந்த மஹாத்மாக்கள் ஏகாக்ரசித்தர்களாய்ச்செய்த மாநஸமெனப்பட்ட ஜபத்தால் ஹரி ப்ரீதராகின்றனர். யுகாந்த க்ஷய காலத்திலுண்டாகும் ஸூர்ய தேஜஸ்ஸை யொத்தது அவர்களுக்குள் ஒவ்வொருவர் தேஜஸ்ஸும். அப்போது ஆயிரம் யுகாந்த ஸூர்யர் உதயமானதை யொத்து, அந்த ப்ரதேசத்தில் ஒரு தேஜஸ்ஸானது ஜ்வலித்தது. அதை ப்ரஹ்மபுத்ரர்கள் கண்டார்கள். அந்த மஹாங்கள் ஒருமித்து அஞ்ஜலி பத்தர்களாய், ‘நம:’ என்று சொல்லிக்கொண்டு அந்தத் தேஜஸ்ஸை நோக்கி ஓடினார்கள். கைகளில் உபஹாரங்களை எடுத்துக்கொண்டு போனவர்களுடைய விபுலமான த்வநியைக் கேட்டவுடன் ப்ரஹ்மபுத்ரர்களுக்குக் கண்கள் பார்வையற்றன; மற்ற இந்த்ரியங்களும் பலமற்றவையாயின. ஆகாசமெங்கும் பரவி விஸ்தரித்த ஓரே சப்தத்தை அவர்கள் கேட்டனர்; அதாவது:— ஜிதந்தே ஸ்தோத்ரம்:

‘ஜிதம் தே புண்டரீகாக்ஷ நமஸ்தே விஶ்வபாவந । நமஸ்தே஽ஸ்து ஹ்ருஷீகேஶ மஹாபுருஷ பூர்வஜ ॥’, எனும் ஶ்லோ

கம். அதேகாலத்தில் வாயுவானது திவ்ய புஷ்பங்களையும் ஔஷதிகளையும் இறைத்துக்கொண்டு திவ்ய கந்தத்துடன் வீசிற்று. பஞ்சகால பராயணர்களும், பரமபக்தியுடையவர்களும், பரமைகாந்திகளுமான அந்த ஶ்வேத த்வீபவாஸிகளால் ஸ்ரீஹரியானவர் மநோவாக்கர்மங்களால் ஆராதிக்கப்பட்டார். நிஜமாக அவர்கள் மேற் கூறியபடி ஸ்துதித்தபோது, பகவான் அவர்களுக்குத் தர்சநமளித்திருக்கவேண்டும். ஆனால், அவனது மாயையால் மோஹிதர்களான ப்ரஹ்ம புத்ரர்கள் நாராயணனைத் தர்சித்தார்களில்லை. வாயுவும் நின்றுபோய்ப் பகவதாராதநமும் முடிந்தபிறகு, அவர்கள் சிந்தாகலுஷித சித்தராய்ப் போந்தார்கள். அந்த ஸத்ரயாஜிகளில் ஒருவர்கூட இவர்களைக் கண் எடுத்துப் பார்க்கவில்லை. பிறகு, ஒரு அசரீரிவாக்குண்டாய், "ஸர்வேந்த்ரிய ரஹிதர்களான ஶ்வேத புருஷர்கள் உங்களால் தர்சிக்கப்பட்டார்கள். அவர்கள் தர்சித்த தேவநாதன் உங்களுக்கும் தர்சநமளிப்பன். அபக்தர்களுடைய தர்சநத்தில் அவன் வரமாட்டான். வந்த வழியே நீங்கள் உடனே திரும்புங்கள். ப்ரபா மண்டலத்தின் ஜ்யோதிஸ்ஸால், அவனுடைய தர்சநம் உங்கட்கு ஸுகரமன்று. ஆகிலும் பாரமைகாந்தித்வத்தை ஸாதித்த பக்தர்கள் பகுகாலம் காத்து அவனைத் தர்சிக்கின்றனர். இந்த க்ருதயுகம் கழிந்து, வைவஸ்வத மந்வந்தரத்தில் த்ரேதாயுகம் ஸம்ப்ராப்தமான பிறகு லோகத்துக்கு ஒரு கஷ்டம் நேரிடப்போகின்றது. அப்போது தேவதைகளுடைய கார்யஸித்தியின்பொருட்டு நீங்கள் ஸஹாயபூதர்கள் ஆகப்போகின்றீர்கள்', என்று இவ்வண்ணம் சொல்லிற்று. அம்ருதமயமான அந்த ஶப்தத்தை அவர்கள் கேட்டுப் பகவத் ப்ரஸாதத்தால் தாங்கள் அபேக்ஷித்த தேசத்தை மறுபடியும் அடைந்தார்கள்.

வீபர் என்பவரும், இன்னும் சில ஐரோப்யர்களும் இந்தப் பாரத ப்ரகரணத்தைப் படித்துவிட்டு, இடலியிலோ, மற்றொரு ஐரோப்பா தேசத்திலோ சில விப்ரர்கள் ரோமன் கிறிஸ்தவர்களுடைய ஆலயங்களில் நடந்த சடங்குகளைக் கண்டு, மேல் விவரித்த வண்ணம் எழுதிவிட்டதாகச் சொல்கின்றனர். மதாபிநிவேசம் ஒருவனுக்கு ஸ்வமதத்தைக் குறித்து அகாரண விஶ்வாஸங்களை உண்டாக்கும்; பரமதங்களில் நிந்தாபுத்தியையும் ஜநிப்பிக்கும்; படிப்படியாக மதிப்ரம்ஶமும் புத்திநாசமும் அவனுக்கு

ப்ராப்தமாகும். மஹாமௌட்யம் விநா, ஈத்ருஶ யோசனை உத்பவிக்கமாட்டாது. ரோமன் சடங்குகட்குப் பௌத்த ஸமயாசாரங்கள் மூலமென்பது ப்ரவஸித்தம். பௌத்த ஸமயத்துக்கும் பாஞ்சராத்ரம் முற்பட்டது. கார்யகாரண பாவம் ஒருவிதமாக ஏற்பட்டாலும், அதை மாற்றி யோசிப்பது மூடன் தொழில். டிலங்கு எனப்பட்டவர், இந்தப் பாரதவிஷயத்தைக் கவியினது கேவல மநோரத மென்றனராம். மநோரதமாயினும், அதற்கு ஆதாரமான பூர்வ ஸ்மரணங்கள் இருந்திருக்கவேண்டும். வைதிக ஸம்ப்ரதாயம் த்ருவ ப்ரதேசத்தில் உண்டானதாக டிலக் வித்வான் யோசித்தார். ஆதித்ய தேவதைகள் த்ருவப்ரதேச ஸம்பந்தங்களோடு வேதங்களில் விளங்குகின்றனர். த்ருவ ஸமீபத்தில் தான் க்ஷீராப்தியும் ஶ்வேத த்வீபமும் இருக்கின்றன. இவை ஸ்ரீமந்நாராயணனுக்கென்றே ஏற்பட்ட ஸ்தாந விஶேஷங்கள். அவ்விடம் பகவானை உபாஸித்த ஶுத்தயாஜிகள் வஸித்ததாகப் பூர்வ ஸ்மரணம். அவர்களைப்பற்றித் தான் ‘ஜ்யாயநுகூலதா’ என்று சொல்லப்பட்டது. பகவானுடைய முக்ய ஸ்தாநங்களைப் பற்றி, ‘ஸஹஸ்ரவாரே ஹவ நஸ்ய ஜ்யோ நாகஸ்ய வ்ருஷ்டே’ என்று ஶ்ருதி மொழிந்தது; அதாவது, அபாரமான ஸமுத்ரம், ஸூர்ய மண்டலம், ஸ்ரீவைகுண்டம் எனப்பட்ட ஸ்தாந விஶேஷங்கள், ஶ்வேத த்வீபவாஸிகள் கண்ட மஹாதேஜஸ், அரோரா பொரியாலிஸ், (Aurora borealis) என்று பரர்க்கு ஏன் தோன்றக் கூடாதோ? எதைப்பற்றி யோசிப்பவனும் (Sympathy) எனப்பட்ட அநுகூல புத்தியின்றி யோசித்தானாகில் விபரீதத்தில் தான் இழியக்கடவன். ஶ்வேத த்வீபவாஸிகள் மஹநீயர்க்கும் விசேஷ தபஸ்ஸின்றித் தர்சிக்கத்தக்கவர்கள் அல்லர் என்று பாரதத்தில் சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் க்ஷுத்பிபாஸை யற்றவர்களென்றும், இந்த்ரியவர்ஜிதர்களென்றும் சொல்லப்பட்டுள்ளது. ஆதலால் அவர்கள் ஸ்தூலசரீரங்க ளில்லாதவர்களென்று எண்ணத் தக்கவர். இது மநோரத ப்ரவாஹ மெனப்படலாம். ஸ்தூலசரீரமற்ற ஆத்மாக்களுடைய ஸத்பாவத்தை ஒப்புக்கொள்வோர் அங்ஙனம் சொல்லத் துணியமாட்டார்கள். நாரதரைப்போன்ற தேவர்ஷிகள் ஶ்வேத த்வீபாநுபவ முள்ளவர்களாயிருந்து, ஏகாந்திகள் மதத்தை வ்யாஸர் முதலான நம் பூர்வீகர்க்கு உதவினர்களென்பது ஸம்ப்ரதாய நிஶ்சயம்.

ஸ்ரீ:.

ஸ்ரியை நம:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:.

# ந்யாயபரிசுத்தி.*

(தொடர்ச்சி.)

கௌதமருடைய ந்யாய தர்ஶநம்போலவே, நம் தேசிகனுடைய ந்யாய பரிசுத்தியும் ஐந்து அத்யாயங்கள் கொண்டுள்ளன. முதலாவது ப்ரத்யக்ஷாத்யாயம், இரண்டாவது அநுமாநாத்யாயம், மூன்றாவது ஶப்தாத்யாயம், நான்காவது ஸ்ம்ருத்யத்யாயம், ஐந்தாவது ப்ரமேயாத்யாயம். இது ந்யாய பரிசுத்தியிலுள்ள க்ரமம். ந்யாய தர்ஶநத்தில் ஐந்து அத்யாயங்கள் இருப்பினும், பூர்வோத்தர மீமாம்ஸாதிகளில் விஷயமுகேந அந்தந்த அத்யாயங்களுக்குப் பெயரிடப்பட்டிருப்பதுபோல் ந்யாய தர்ஶநாத்யாயங்களுக்குப் பெயரிடப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இவ்விஷயத்தில் ந்யாய பாஷ்யாதிகளும் உதாஸீநங்களே. விஷயங்களுடைய பாஹுள்யத்தாலோ, விப்ரகீர்ணதையாலோ ஸரியானபடி விபாகித்து நாம நிர்த்தேஶம் செய்யமுடியாமலுமிருக்கலாம். ந்யாய தர்ஶநத்தில் ஒவ்வொரு அத்யாயத்திற்கும் இவ்விரண்டு ஆஹ்நிகங்கள்; மொத்தம் ந்யாய தர்ஶநத்தில் பத்து ஆஹ்நிகங்கள். ந்யாய பரிசுத்தியிலோ, முதல் அத்யாயத்திற்கு இரண்டு ஆஹ்நிகங்கள்; இரண்டாவதுக்கு நான்கு; மற்ற மூன்றிற்கும் இவ்விரண்டு ஆஹ்நிகங்கள்; ஆக மொத்தம் பன்னிரண்டு ஆஹ்நிகங்கள். ஆஹ்நிகமென்பது, ஸர்க்கம் காண்டம் அதிகரணம் அத்யாயம் முதலியவைகளைப்போலவே ஒவ்வொரு ப்ரகரண விச்சேதத்தைத் தெரிவிக்கிற ஒரு ஸாங்கேதிக ஶப்தம் அல்லது குறிச்சொல். ஆஹ்நிக

* இது, சென்ற, மார்கழிமீ-ல் பூவிருந்தவல்லியில் நடந்த ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் எட்டாவது வார்ஷிக மஹாஸங்கத்தில் படிக்கும்பொருட்டு, ஸ்ரீ. உப. அபிநவபட்டபாண ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியால் எழுதியனுப்பப்பட்ட உபந்யாஸம்.

மென்றால், ஆசார்யன் ஶிஷ்யர்களுக்கு ஒருநாளில் உபதேஶித்த பாகமென்றும், அல்லது ஒருநாளில் க்ரந்தகர்த்தா எழுதிய பாக மென்றும் நினைக்கப்படுகிறது. '𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌹𑌿 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑍁𑌪𑍂𑌰𑍍𑌵𑍀𑌕𑌾 𑌵𑌰𑍍𑌣𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍀, 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯 𑌆𑌹𑍍𑌨𑌿𑌕𑌸𑌮𑍂𑌹𑌃, 𑌆𑌹𑍍𑌨𑌿𑌕𑌂 𑌤𑍁 𑌤𑌾𑌦𑍃𑌶 𑌪𑍍𑌰𑌕𑌰𑌣 𑌸𑌮𑍂𑌹𑌃, 𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌂 𑌤𑍁 𑌤𑌾𑌦𑍃𑌶 𑌸𑍂𑌤𑍍𑌰 𑌸𑌮𑍂𑌹𑌃, 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌤𑌾𑌦𑍃𑌶 𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑌮𑍂𑌹𑌃, 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌤𑌾𑌦𑍃𑌶 𑌪𑌦𑌸𑌮𑍂𑌹 𑌇𑌤𑌿 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿. 𑌅𑌤𑍍𑌰 𑌸𑌮𑍂𑌹 𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌸𑌮𑍂𑌹𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌂. 𑌤𑍇𑌨 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌦𑍇𑌃 𑌆𑌹𑍍𑌨𑌿𑌕𑌾𑌦𑌿 𑌦𑍍𑌵𑌯 𑌘𑌟𑌿𑌤𑌤𑍍𑌵𑍇𑌪𑌿 𑌨 𑌕𑍍𑌷𑌤𑌿𑌃;' என்று ந்யாய ஸூத்ர வ்ருத்தியில் காணப்படுகிறது. இந்த ஆஹ்நிக ஶப்தத்தை மஹர்ஷி ப்ரணீதங்களான பாஷ்யாதிகளிலும் தத்ஸத்ருஶங்களான ஸூத்ராதி ப்ரௌட க்ரந்தங்களிலும் தான் ப்ரயோகித்திருப்பதாகத் தெரியவருகிறது. இனி ஸ்தூலமாக விஷயங்களைக் குறிப்பிடுவோம்.

I. ப்ரதமாத்யாயத்தில் ப்ரதமாஹ்நிகத்தில் ஆரம்பத்தில் மௌதம ந்யாய தர்ஶந பஹிஷ்கார பக்ஷமும், பிறகு ஸ்வீகார பக்ஷமும், பின்பு அவிருத்தாம்ஶ ஸ்வீகார விருத்தாம்ஶ பரித்யாமாத்மகமான அர்த்த ஸ்வீகார பக்ஷமும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. பிறகு இந்த ந்யாய தர்ஶநத்திற்கு அதிகாரி யார் என்பதை எடுத்துக்கொண்டு, ந்யாய பாஷ்யகாராதிகளுடைய அபிப்ராயத்தைக் கண்டித்து, ப்ரமாணங்களைக் காட்டி, இந்த ந்யாய தர்ஶநத்திலும் த்ரைவர்ணிகர்களுக்கு மாத்ரமே அதிகாரம் உண்டு என்று நிரூபிக்கிறார். பிறகு ந்யாய தர்ஶநத்தின் ப்ரயோஜநமும், விஷயமும், ப்ரமேய நிருபணத்திற்குள்ள ஔசித்யமும் சொல்லப்படுகின்றன. அப்பால், ப்ரமாண ப்ரமேய ஸம்ஶய ப்ரயோஜந த்ருஷ்டாந்த ஸித்தாந்த லக்ஷணங்கள், ... வைஸ்வரூப்யாதி விஷயமென்றும், க்வாசித்கமான ஸம்ஶய நிவாரணார்த்தமாகவே லக்ஷண கதநமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. பின்னர் ப்ரமாண லக்ஷணத்தை ஆரம்பித்துப் பரோக்த லக்ஷணங்களைக் காட்டிவிட்டு, ஸ்வாபிமதமான லக்ஷணம் கூறப்பட்டது. இந்த ப்ரகரணத்தில் ஸ்ம்ருதிக்கு ப்ராமாண்ய முண்டென்பதை ஸூசிப்பித்துவிட்டு, க்யாதி நிருபணத்தில் இறங்கி, பாஷ்யாபிமதங்களான அக்யாதி அந்யதா க்யாதிகளையும், ஶ்ரீமந்நாதமுநிக

ளுக்கு அபிமதமான யதார்த்த க்யாதியையும் நிரூபித்துவிட்டு, ஸித்தாந்த விருத்தங்களும் ப்ரகட ப்ரச்சந்ந பௌத்தாங்கீக்ருதங்களுமான ஆத்ம க்யாதி நிரதிஷ்டாந க்யாதி அநிர்வசநீய க்யாதி நிர்விஷய க்யாதி ஆகிய நான்கு க்யாதிகளையும் நிராகரித்தருளினர். இங்கு யதார்த்த க்யாதியை நாதமுநிகள் அங்கீகரித்திருப்பது யுக்திக்கும் அநுபவத்திற்கும் வாராதாகையால், இது வைபவவாத மென்று சில ஆசார்யர்கள் நிர்வாஹம் செய்திருப்பதில் தமக்குள்ள அருசியை 'கெவிஉ-ஙிவிரெ' என்பதால் ஸூசிப்பித்திருக்கிறார். யதார்த்த க்யாதி நிர்வாஹமானது 'நாநெ்யாஸதா யயாஸஹ்ாவி உதஜிதி ஈவிந்யாய தலெவத ஜெ தஹூாஷெ்யுடநடிகதும் தஉதுவுவஹுரதி ஈஹயீ ஸாயிதா ஸாயிதாவுா. ஶாகதஎ ஈடிவும் வுஹாஂஹஃ ஶுாதிநயந வஶ தஸாவஉவெஹுஸா ஸது‌ம் யொதுாயொதுாதி ஹெஉாதுஹ ஐஹ ஸாஉோம் தூாஹஎெத ஸம்வுதிஷாம்' என்னும் தத்வ முக்தாகலாபத்திலும் ஸர்வார்த்த ஸித்தியிலும் கண்டுகொள்ளத்தக்கது. 'யஶா ஸஉூ ஸவஹவிஜ்ஞாந ஜிதி வெடஉவிஉாம்ஜேதம்' என்று ஸ்ரீபாஷ்யகாரரும் இந்த க்யாதியை ஒப்புக்கொண்டிருக்கிறார். இதனுடன் முதலாவது ஆஹ்நிகம் முடிவு பெறுகிறது.

:

இரண்டாவது ஆஹ்நிகத்தில், ஸ்வோக்த ப்ரமாலக்ஷணத்திற்கு வ்யவச்சேத்யமாக விபர்யயமும் ஸம்ஶயமும் முதலில் நிரூபிக்கப்படுகின்றன. இங்கு விபர்யயத்தினுடையவும் ஸம்ஶயத்தினுடையவும் ஸ்வரூபத்தையும், பேதங்களையும், இவைகளுடைய காரணங்களையும், மதபேதங்களையும் நிரூபித்துவிட்டு அநத்யவஸாயமும் ஸம்பாவநாத்மகமான ஊஹமும் ஸம்ஶயாந்தர்க்கதங்கள் தான் என்று ஸ்தாபிக்கிறார். பின்பு, ப்ரத்யக்ஷ மொன்று தான் ப்ரமாண மென்று சார்வாகரும், ப்ரத்யக்ஷாநுமாநங்கள் ப்ரமாணங்கள் என்று வைஶேஷிகரும் பௌத்தரும், ப்ரத்யக்ஷாநுமாநஶப்தங்கள் ப்ரமாணங்கள் என்று ஸாங்க்யரும் பூஷண்மதாநுஸாரி நையாயிகரும், ப்ரத்யக்ஷாநுமாநோபமாந ஶப்தங்

கள் ப்ரமாணங்கள் என்று நையாயிகரும், முன்சொன்ன நான்குடன் அர்த்தாபத்தியையும் சேர்த்து ஐந்து ப்ரமாணங்கள் என்று ப்ரபாகரும், அபாவத்தையும் சேர்த்து ஆறு ப்ரமாணங்கள் என்று பாட்டரும் அத்வைதிகளும், ஸம்பவம் ஐதிஹ்யம் ஆகிய இவைகளையும் சேர்த்து எட்டு ப்ரமாணங்கள் என்று பௌராணிகருஞ் சொல்லிவந்தபோதிலும், '𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑌨𑍁𑌮𑌾𑌨𑌂𑌚 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂𑌚 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌗𑌮𑌮𑍍' என்கிற மநுஸ்ம்ருதியையும், '𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌨𑍁𑌮𑌾𑌨𑌾𑌗𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑌿' என்கிற பாதஞ்ஜல யோகஸூத்ரத்தையும் அநுஸரித்தும், மற்ற ப்ரமாணங்கள் மூன்றில் அந்தர்ப்பூதங்களென்று நினைத்தும் '𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌨𑍁𑌮𑌾𑌨𑍋𑌪𑌮𑌾𑌨𑌶𑌬𑍍𑌦𑌾𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑌿' என்கிற ந்யாய ஸூத்ரத்தை அநாதரித்துவிட்டு, '𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌨𑍁𑌮𑌾𑌨𑌶𑌬𑍍𑌦𑌭𑍇𑌦𑌾𑌤𑍍' என்று மூன்று ப்ரமாணங்களையே ஸ்வீகரித்தார். கீழ்ச்சொன்ன எட்டு ப்ரமாணங்கள் விஷயத்திலும் அவாந்தர பத பேதத்தையும் அந்தர்ப்பாவ ப்ரகாரத்தையும் ஸ்ம்ருத்யத்யாயத்தில் கண்டுகொள்ளலாம். யதார்த்தமான ஸ்ம்ருதிக்கு ப்ராமாண்யமுண்டென்றாலும், அது ப்ரத்யக்ஷாதி மூலக மாகையால் தனியாக ப்ரமாணத்வேந சொல்லப்படவில்லை யென்று ஸ்ரீதேசிகன் எழுதுகிறார். பின்பு ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்கு லக்ஷணம் சொல்லப்படுகிறது. இதில் பூர்வாசார்யர்களின் ஸம்வாதமும் காட்டப்பட்டது. பின்பு '𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸𑌂𑌯𑍋𑌗𑌃, 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍇𑌷𑍁 𑌸𑌮𑌵𑌾𑌯𑌿𑌷𑍁 𑌤𑍁 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑌂' என்று விஷயேந்த்ரிய ஸம்பந்தத்தை இருவகையாகப் பிரித்துக் காட்டுகிறார். பிறகு ஸவிகல்பக நிர்விகல்பக ஜ்ஞாநங்கள் நிரூபிக்கப்படுகின்றன. இங்கு எல்லா ஜ்ஞாநமும் ஸவிகல்பகம் தான் என்றும், நிஷ்ப்ரகாரக ஜ்ஞாநம் நிர்விகல்பகம் என்றும், ஸவிகல்பகம் ப்ரத்யக்ஷமல்ல வென்றும், நிர்விகல்பக ஜ்ஞாநம் அப்ரமாணமென்றும், ஸவிகல்பக ஜ்ஞாநம் அப்ரமாணமென்றுமுள்ள மதங்கள் ஸங்க்ரஹேண கண்டிக்கப்பட்டிருக்கின்றன. '𑌸𑌰𑍍𑌵𑌞𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌸𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌂, 𑌤𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂, 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿-

க்ஷூம்' என்று லக்ஷணமும், இதில் பூர்வாசார்ய ஸம்வாதமும் எழுதப்பட்டிருக்கின்றன. ஹவஹு - ஜ்ஞாநத்வயமும் விஶிஷ்ட வஸ்து விஷயக மாகையால், ஸந்மாத்ரக்ராஹி ப்ரத்யக்ஷத்தை ஒப்புக்கொள்ள முடியாதென்று உபஸம்ஹரிக்கிறார். இந்த இரண்டு ஜ்ஞாநங்களுக்கும் பரஸ்பர பேதம் ஸாமக்ரீ வைஷம்யத்தாலும் க்ராஹ்யாகார வைஷம்யத்தாலும் ஏற்படுகிற தென்றும், ஸாமக்ரீ வைஷம்யம் ஸம்ஸ்கார ஓஸவிவக்ஷ தத்பாவங்க ளென்றும், மொக்ஷாஜ்ஞா வ்ருத்தி தத்பாவங்கள் க்ராஹ்யாகார வைஷம்ய மென்றும் இந்த ப்ரகட்டகத்தின் பிண்டிதார்த்தம். ப்ரத்யக்ஷ ப்ரஸங்க மாகையால், இங்கு அத்வைதிகளால் அங்கீகரிக்கப்படுகிற ஶப்த ஜந்யாபரோக்ஷ ஜ்ஞாநத்தை ஸங்க்ரஹேண யுக்தி புரஸ்ஸரம் கண்டிக்கிறார். இதனுடைய விஸ்தாரத்தை ஶததூஷணியில் ஶப்த ஜந்ய ப்ரத்யக்ஷ பங்கவாதத்தில் கண்டு கொள்வது. இதனுடன் ப்ரத்யக்ஷாத்யாயம் முடிவு பெறுகிறது.

(இன்னும்வரும்.)

---

ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யராற் செய்யபட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |
| 3. ஸ்ரீ பாகவத தஶஶ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹமாசார்யர்) ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 4. ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 5. ஸ்ரீராமாயணத்தில் விசேஷார்த்தங்கள் ஸ்ரீ. உப. ஏஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 6. ஆர்யாப்யுதயம். ஸ்ரீ. உப. டி. இ. சடகோபாசாரியர் ... ... ... | 0 | 2 | 0 |

ஸ்ரீ:

ஸ்ரியை நம:

ஸ்ரீமதே யஜ்ஞவராஹவபுஷே ஹம்ஸாய நம:

# ஹிந்து விவாஹத் திருத்த மசோதா. *

(தொடர்ச்சி)

ஆசாரத்திருத்த நோக்கமுள்ளவர்கள், இச்சட்டத்தை ஆதரித்து, இதை நிறைவேற்றும்படி ஆங்காங்கு கூட்டங்கூடி கவர்ன்மெண்டாரைக் கேட்டுவருகிறார்கள். இவர்களுடைய கூச்சலுக்குக் கவர்ன்மெண்டார் செவிகொடுக்கமாட்டார்களென்றே நம்புகிறோம். ப்ரிடிஷ் ஆஜ்ஞையின்கீழ் வெகுகாலம் வரையில் ஆசார விஷயங்களில் வெகு அமைதியாயிருந்த நமது தேஶமானது, ஆசாரத்திருத்தக்காரர்களாலேயே பல துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. இப்போது நடந்துவரும் ப்ராஹ்மணேதரர்களுடைய கலஹங்களும் இந்தத் திருத்தக்காரர்களுடைய கார்யங்களாலேயே உண்டாயின வென்பதை நாம் தைர்யமாய்ச் சொல்லக்கூடும். சாந்தமாகத் தன் தொழில்களைக் கவனித்துவந்த அவ்வகுப்பினர்க்கு, ஜாதிபேத வ்யவஹாரங்களில் ப்ரவேஶிக்கும்படியான உபந்யாஸாதிகளைச்செய்தும், யாவரும் ஸமமானவர்களே யென்றும், ஈஶ்வர ஸ்ருஷ்டியில் பேதங்கிடையாதென்றும், பல ஆசாரத் திருத்தக் கூட்டங்களில் சொல்லி, அவர்களுடன் ஸஹபோஜநாதி மஹோத்ஸவங்களையும் செய்து, ப்ராசீந காலந் தொடங்கியிருந்த பய விஶ்வாஸாதிகளைப் போக்கிவிடவே இப்போது அவர்கள் ப்ராஹ்மணர்களை, முக்யமாய் ஆசாரத்திருத்த உபதேஶஞ்செய்த ப்ராஹ்மணர்களை, த்வேஷிப்பதுடன் பல கஷ்டங்களையும் விளைத்து வருகிறார்கள். ஆகையால் திருத்தக்காரர்களுடைய வார்த்தைகளைக் கவர்ன்மெண்டார் கேட்காமலிருப்பதே தேஶக்ஷேமத்திற்கு அநுகூலமென்று நாம் சொல்லுகிறோம்.

---

* இது, சென்ற மார்கழி மாஸத்தில் பூவிருந்தவல்லியில் நடைபெற்ற எட்டாவது ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கத்தில் ஸ்ரீ. உப. அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

இதுபோல், அப்ராஹ்மண ஸமூஹத்தாரும் இந்தச் சட்டம் வேண்டுமென்று பல கூட்டங்களில் தீர்மானித்திருக்கிறார்கள். இவர்கள் எம்மாதிரி உத்தேசத்துடன் இதை ஆதரிக்கிறார்களென்று நிஸ்சயமாய்ச் சொல்லக்கூடவில்லை. ஆயினும் சில வர்ஷங்களுக்கு முன் இந்தியாவில் நடந்த 'பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன்' என்கிற விசாரணை ஸங்கத்தின் முன் அநேக யூரோப்யர்களும் கிறிஸ்தவர்களும் அப்ராஹ்மணர்களும் ப்ராஹ்மணர்களுடைய புத்தி ஶக்தியைப்பற்றிப் பயந்து பஹிரங்கமாக ஸாக்ஷி சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவில் புதிதாகப் பரீக்ஷைகளை ஏற்படுத்தினால், எல்லாவற்றிலும் ப்ராஹ்மணர்களே தேறிவிடுவார்களென்று பயங்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி எத்தேயத்தினரும் கண்டு அஞ்சும்படியான புத்தி ஶக்தி ப்ராஹ்மணர்க்கு இருப்பதைத் தொலைக்கவேண்டுமென்கிற கெட்ட எண்ணத்தாலேயே விஜாதீய விவாஹங்கள் வேண்டுமென்று இவர்கள் நினைப்பதாக நாம் ஊஹிக்க ந்யாயமிருக்கிறது. இவர்கள் நினைப்பதுபோல் ஒருகாலத்திலும் நேராதென்பதே நமது தைர்யமாகும். இவர்கள் என்ன நினைத்தாலும் இச்சட்டத்தினால் அவர்களுக்குப் பல தீங்குகள் விளையத் தடையில்லையென்றே நாம் நினைக்கிறோம். ப்ராஹ்மணரல்லாதார்க்குள்ளும் இப்போதும் பற்பல வகுப்புக்கள் இருந்து வருகின்றன. அவர்களிலும் பலர், இப்போதும் நல்ல புத்தித்தேர்ச்சியுடனிருந்து தான் வருகிறார்கள். இச்சட்டத்தினால் அதெல்லாம் அழிந்துபோவதுடன், அந்த ஜாதியரும் வெகு தாழ்ந்த நிலைமைக்கு வரத் தடையில்லை. சூத்ரர்கள் தனக்குக் கீழ்ப்பட்ட ஜாதியர்களுடனும், மேற்பட்டவர்களுடனும் விவாஹாதி ஸம்பந்தங்களைச் செய்துகொண்டு இக பர வாழ்க்கைகளை இழக்கக்கூடாதென்னும் அபிமானத்துடனேயே நமது மஹர்ஷிகள் அவர்கட்கும் பல நியமங்களைச்சொல்லி யுள்ளார்கள். ப்ராஹ்மணர்களுடன் கலந்து கொள்ளலாமென்று அவர்கள் நினைத்தாலும், 'ஶூத்3ரா தாயொ ஹவக்ஷத்ரா ப்3ராஹ்மணஸ்ய யதோ ந்ருணாம்' என்று மநுவும், 'ஶூத்3ராஜ்ஜாதஸ்ய ப்3ராஹ்மணஸ்ய ஸவர்ணயோ ப3ஹிஷ்க்ருத:' என்று யாஜ்ஞவல்க்யரும், 'ப்3ராஹ்மண்யாம் ஶூத்3ரஸம்ஸர்கா3ஜ்ஜாதஶ்சண்டா3ல உச்யதே' என்று உஶநஸ் முதலியவர்களும் சொல்லியிருப்பதுபோல், ஶூத்ரர்களுக்கு ப்ராஹ்மண ஸ்த்

ரீயினிடம் உண்டாகும் ஸந்தாநங்களைச் சண்டாளர் என்கிற ஜாதியாலேயே வ்யவஹரிக்கவேணுமென்று சொன்னார்கள். எப்படி ப்ராஹ்மணனுக்கு ப்ராஹ்மணஜாதி ஸ்த்ரீயினிடம் பிறந்தவனையே பரிசுத்த ப்ராஹ்மணன் என்று '𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌜𑍍𑌜𑌾𑌤𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍' என்பதால் சொல்லப்பட்டதோ, அதுபோல் சூத்ரர்களுக்கு சூத்ரஸ்த்ரீயினிடம் பிறந்தவர்களையே ஸச்சூத்ரர்களென்று '𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌦𑍇𑌵 𑌤𑌁 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌯𑌾𑌂 𑌜𑌾𑌤𑌶𑍍𑌶𑍂𑌦𑍍𑌰 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 । 𑌸 𑌶𑍂𑌦𑍍𑌰𑌂 𑌤𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌤𑍍 𑌅𑌸𑌶𑍂𑌦𑍍𑌰 𑌸𑌹𑌿𑌤𑍋𑌨𑍍𑌯𑌯𑌾 ॥' என்பதால் ஜாதி வ்யவஸ்தைகளை விஸ்தாரமாகச் சொன்ன உஶநஸ் விவரித்தார். ஆகையால் அப்ராஹ்மணர்களும் இந்தச் சட்டத்தை எதிர்க்கக் கடமைப்பட்டவர்களே.

இங்கு சில ப்ராஹ்மணர்களும் அப்ராஹ்மணர்களும், "வேதங்கள் ஸ்ம்ருதிகள் முதலியவை ப்ராஹ்மணர்களாலேயே எழுதப்பட்டனவாகையால், அவர்கள் தங்களுடைய க்ஷேமத்தை மட்டும் தேடிக்கொண்டு பக்ஷபாதத்தால் ஶூத்ரர் முதலியவர்களைத் தாழ்ந்த நிலைமையில் இருக்கும்படியான சட்டதிட்டங்களைச் செய்து ஜாதிக்கலப்பு விவாஹங்களைத் தடுப்பது ஸஹஜமே யாகும்; ஆகையால் அவைகளை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடா" தென்று பல விடங்களில் சொல்லுகிறார்கள். இவர்கள் இக்காலத்திய ப்ராஹ்மணர்களைப்பற்றி எவ்வளவு சொன்னபோதிலும், முன்காலத்திலிருந்த மஹர்ஷிகளைத் தாழ்த்திப் பேசுவதும், அவர் பக்ஷபாதத்துடன் க்ரந்தங்களைச் செய்தார்களென்று சொல்வதும் மிகவும் அந்யாயமானதே. ஸ்ம்ருதிகளில் எங்கும் ப்ராஹ்மணர்களையே ஸ்தோத்ரம் செய்துவிடவில்லை. ஶாஸ்த்ரோக்த கர்மங்களைச் சிறிது அலக்ஷ்யம் செய்யும் ப்ராஹ்மணர்களை ஸ்ம்ருதிகள் படுத்தும் பாடு கொஞ்சமானதல்ல. அதுபோல் சூத்ராதிகளை எங்கும் வேண்டுமென்று நிந்திக்கவில்லை.

ஆயினும் ஒவ்வொரு ஜாதியர்க்கும் இன்னின்ன தொழில் தானென்றும், இதை மீறி ஒருவனுடைய கார்யத்தை மற்றொருவன் செய்தால் பதிதன் என்று சொன்னால் இது பக்ஷபாதமாகுமா? இம்மாதிரி ஒவ்வொருவருக்கும் தொழிலை வகுத்து ஒன்றில் மற்றொருவன் ப்ரவேசிக்கக்கூடாதென்று சொல்வது ஒருவர்க்

கொருவர் கலகமில்லாமல் வாழ்வது எவ்வளவு ஸௌகர்யமென்பதை அநுபவஶாலிகளே அறிவர்.

ப்ராஹ்மணர்கள், ஒவ்வொரு ஜாதியும் நல்லகதி யடையும் பொருட்டே பஹுபல ஶாஸ்த்ரங்களையும் எழுதி வைத்தார்களே யல்லது, தன் ஜாதியின் க்ஷேமத்திற்காக மட்டும் எழுதிவைத்துக் கொண்டார்களில்லை. அவர்கள் ப்ரஹ்ம வித்யாவிஷயகமாக எப்படி க்ரந்தங்கள் எழுதினர்களோ அப்படியே க்ஷத்ரியர்களின் நிமித்தம் பல நீதி க்ரந்தங்களையும், வைஶ்யர்களின் நிமித்தமாகப் பசு பாலந மார்க்கம் வியாபாரமார்க்கம் இவைகளைச் சொல்லும் க்ரந்தங்களையும், சூத்ரர்களுக்காக வ்யவஸாய ஶாஸ்த்ரம், அஶ்வலக்ஷண ஶாஸ்த்ரம், ஹஸ்த்யாயுர்வேதம், வ்ருக்ஷாயுர்வேதம் முதலிய பல ஆயுர்வேத ஶாஸ்த்ரங்கள், நாட்யஶாஸ்த்ரம், க்ருஹ நிர்மாண ஶாஸ்த்ரம், சித்ரமெழுதும் ஶாஸ்த்ரம்போன்ற பல அத்புத ஶில்ப ஶாஸ்த்ரங்களையும் எழுதிவைத்துத் தானிருக்கிருர்கள். க்ஷத்ரியர்களுக்காகத் தண்டநீதி முதலியவைகளை எழுதிவைத்தவர்கள் நாரதர், ஶுக்ரன், வ்யாஸர், சாணக்யன், காமந்தகர் முதலியோர் ப்ராஹ்மண ரல்லவா? இவர்கள், ப்ராஹ்மணர்கள் க்ஷேமத்தின் பொருட்டா இந்த நீதிக்ரந்தங்களை எழுதிவைத்தனர்? அல்ல இதுபோல், ஆயுர்வேதாதிக்ரந்தங்களை எழுதிவைத்த வாகபட ஸுஶ்ருதாதி ப்ராஹ்மணர்கள் தம் ஜாதியரின் நன்மைக்காக அவைகளை எழுதினதாகச் சொல்ல முடியுமா? 'தஸ்மாத் ப்ராஹ்மணேந பேஷஜம் ந கார்யம்' என்று சொல்லி, ப்ராஹ்மணர்கள் இதை ஒரு காலத்திலும் செய்யக் கூடாதென்று தடுத்துவிட்டார்கள். இதுபோல் க்ருஷிசெய்யும் வித்யை, வஸ்த்ரங்கள் செய்யும்தொழில், வீடுகட்டும் தொழில், சித்ரம் எழுதும் வேலைகள், இவைகளில் ஒன்ருவது ப்ராஹ்மணர்களின் நன்மைக்காக ப்ராஹ்மணர்கள் செய்தனரென்று சொல்ல முடியாது. இவ்வளவு ஶாஸ்த்ரங்கள் எழுதிவைத்தும், ப்ராஹ்மணர், தாங்கள் எந்த ஶாஸ்த்ரங்களை எடுத்துக் கொண்டன ரென்பதைக் கவனிக்க வேணும். கேவலம் பரலோகத்

துக்கு மட்டும் ஸாதகமான கர்மாநுஷ்டானங்களையும், மிகுந்த ஶரீர க்லேஶங்களைக் கொடுக்கக்கூடியவும் க்ருச்ச்ர உபவாஸாதி நியமங்களை போதிக்கக்கூடியவுமான ஶாஸ்த்ரங்களையும் தங்கட்கு வைத்துக்கொண்டார்களே யல்லது, இஹலோகத்திற்கு மிக்க அவஶ்யமானவைகளும், ஏராளமான த்ரவ்யங்களைச் சேர்க்க ஸாதநங்களாயுமுள்ள கீழ்ச்சொல்லிய வ்யாபாரம் கைத்தொழில் முதலியவைகளைச் செய்ய மனத்தாலும் இஷ்டப்பட்டார்களில்லை. அவர்களுடைய கருணையையும் பக்ஷபாதமின்மையையும் பார்த்தீர்களா? எந்த மஹாந் க்ஷத்ரியர்களுக்காகத் தண்டநீதி முதலியவைகளை எழுதிவைத்தனரோ, அவர், ராஜ்யபாரம் பண்ணவேண்டு மென்று ஆசைப்பட்டது கிடையாது. நந்த வம்ஶத்தை நாஶம்செய்து சந்த்ரகுப்தனுக்குத் தன்னுடைய நீதியின் மஹிமையால் ராஜ்யத்தை ஸம்பாதித்துக்கொடுத்த சாணக்யன் எந்த நிலைமையில் இருந்தான்? அவனுடைய வீட்டை வர்ணிக்கும்போது, 'உபல ஶகல ௭ேதெதூ௩கம் ஶொமயா நாம்' என்று ஆரம்பித்து, 'ஊரஶ்யெ ஜீண-ீ கூ௩ய்ம்' என்று ஶோமய மும் பாழும் சுவர்களும் காணப்பட்டனவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவன் அபேக்ஷித்தால் சந்த்ரகுப்தனிட மிருந்து ராஜ்யத்தை அபஹரித்து ஸுகிக்க வேண்டியதற்கு எவ்வளவு க்ஷணம் வேண்டும்? அதுபோல் வாஸ்து ஶாஸ்த்ரம் எழுதியவருக்கு உலர்ந்த சருகுகளைக்கொண்டு செய்யப்பட்ட ஜீர்ண பர்ணஶாலைதான் வாஸஸ்தாநம். வஸ்த்ரம் செய்யும் தொழிலைச் சொன்னவர்க்கு மரவுரி க்ருஷ்ணாஜிநங்களே ஆடைகள். இம்மாதிரி ஒன்றல்ல இரண்டல்ல; இஹலோகத்திற்காக எவ்வளவு ஶாஸ்த்ரங்கள் ப்ராஹ்மணர்களால் எழுதப்பட்டனவோ, அவைகள் அனைத்தையும் தாங்கள் வைத்துக்கொள்ளாமல் அப்ராஹ்மணர்களிடமே கொடுத்துவிட்டதுடன், அவைகளில் ப்ராஹ்மணர்கள் ப்ரவேஶித்து ஒரு காலத்திலும் ஜீவிக்க முயலக்கூடாதென்று, 'ஸவ-ீயா தூ வ்ரத்திஈஶஸளெஹூண' என்பதால் தடுத்தும் விட்டார்கள். இவைகளெல்லாம் பக்ஷபாதத்தினுல் செய்யப்பட்ட கார்யங்களா? நன்

மைக்காகச் செய்த கார்யங்களா? இப்படி, சூத்ரர்களுடைய தொழில் முதலியவைகளில் ப்ராஹ்மணர்கள் ப்ரவேசிக்கக்கூடாதென்று தடுத்ததுபோல், ப்ராஹ்மணர்க்குரிய தொழிலாகிய வேதமோதுதல் முதலியவைகளிலும், இன்னும் அவர்களுக்கு மாத்ரமென்று ஏற்பட்ட விதிகளிலும், பிறர் ப்ரவேசிக்கலாகாதென்று சொன்னால் இது பக்ஷபாதமென்று எந்த மூடனும் சொல்லமாட்டான். தவிர, ப்ராஹ்மணர்கள் தம்தம் கர்மாநுஷ்டாநங்களால் எப்படிப் பரலோக ஸுகங்களை அடைகிறார்களோ, அதுபோல ஶூத்ராதிகளும் தம்தம் ஜாதித்தொழில்களையே செய்துவந்து அதனால் பரலோக ஸுகங்களையும் அடையத்தடையில்லை யென்று, 'ஸ்வஸ்வவர்ணாநாம்' 'ஸ்வயமநுஷ்டிதேந ஸ்வதர்மேண பரிநிஷ்டிதம் ஶ்ரேய:' என்பதால் ரிஷிகள் சொன்னார்கள். இதனால் பரலோகத்திலும் அவர்களுக்கு மற்றவர்களைவிடத் தாழ்ந்த நிலைமை கிடையாது. இப்படி யெல்லாம் முன்னோர்களான நம் ப்ராஹ்மணர்கள் சொன்னவழியினால் ஏராளமான த்ரவ்யங்களைச் சேமித்து ப்ராஹ்மணர்களைவிட ஸுகமாக வாழ்ந்துவரும் இப்ராஹ்மண ரல்லாதார், 'உண்ட வீட்டிற்கு இரண்டு நினைப்பது' என்கிற பழமொழிக்கொப்ப முற்காலத்திய ரிஷிகளை நிந்திக்கப் புறப்படுவது எங்ஙனம் அடுக்கும்?

ஆகையால், ப்ராசீந காலத்திய மஹர்ஷிகளுக்குச் சிறிதும் பக்ஷபாதம் கிடையா தாகையாலும், அவர்கள் சொல்லும் ஒவ்வொரு விதிநிஷேதங்களுக்கும் தகுந்த யுக்திகள் இருந்தே தீருமாகையாலும், அவர்கள் ப்ரக்ருத விஜாதீய விவாஹங்களைத் தடுப்பது ஒவ்வொரு வர்ணத்தாருடைய நன்மைக்காகவே என்று நினைத்து ஒவ்வொருவரும் இதைக் கண்டித்துவிட்டுத் தம்தம் ஜாதித்தொழில் முதலியவைகளில் இருந்துகொண்டே தேசத்திற்கும் தங்களுக்கும் க்ஷேமத்தைத் தேடிக்கொள்வார்களென்றே நம்புகிறோம்.

ஸம்ஸ்ஹம்ஹ்ஷியாஸ.

அக்நிஹோத்ரம் - கோபால தேசிகாசார்யர்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜ மஹாதேசிகாய நம:.

ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயவதந பரப்ரஹ்மணே நம:.

# ஹித நிரூபணம். *

ஸ்ரீமத்வைஷ்ணவஸித்தாந்தஸபாஸிம்ஹாஸநேச்வர: ।
ஸதாமீஷ்டஸதாயீ ஜீயாத் ராமாநுஜார்யக: ॥
ஸஹ்யாம்ருதவத ஸ்ரீவைத்ய காமமேதஹித ரஞ்ஜனம் ।
தைநந்த்ய ஸ்ரீசேஷஸூரி: க்ஷத்ரோதாம் ந்ருஸிம்ஹதாத்ருகம் ॥

பூர்வ ஸம்வத்ஸரத்தில் இம்மஹாஸபையில் தெரிந்தமட்டில் நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்த தத்வோபந்யாஸம் அடியேனால் செய்யப்பட்டது. இந்த ஸம்வத்ஸரத்தில் பாகவத நியமநத்தினால் நம் ஸித்தாந்த ஹிதோபந்யாஸம் தெரிந்தமட்டில் செய்யப்படுகிறது. ந்யூநாதிரிக்தங்களை க்ஷமிக்கவேண்டும்.

யதாயிகாரணம் ப்ராஹுர்யஜந்தாந ஹோதாவர்நா ஹாந்ரு ஸந்ஹாவநா ப்ருஹ்ருதிஷி ஸ்ஸோர்யித: । ஹலுதிசதி தேஹிநா ஜிதிஷி ஸம்ப்ருதாய ஸ்யதிச்ருதி ஸ்ம்ருதி ஹந்ருதி ஹிநயவதீ ஹிராஹாதிந: ॥

ஹிதமென்கிற பதத்துக்கு இஷ்டோபாயமாக விதிக்கப்பட்டதென்பது பொருள். அது லௌகிகம் வைதிகம் என இருவகைப்படும்.

அவற்றுள் லௌகிகஹிதமாவது :—அர்த்தகாமாதிகளை ஸம்பாதிக்க வேண்டியதற்காக அர்த்தகாம சாஸ்த்ரங்களால் விதிக்கப்

---

* இது, சென்ற மார்கழிமீ - ல் பூவிருந்தவல்லியில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த மஹாஸபையில் எட்டாவது வார்ஷிக மஹாஸங்கத்தில் சதுஶ்ஶாஸ்த்ர வேதகல்பதரு ஸ்ரீ. உப. திருக்குடந்தை சேஷாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

பட்டது. அது, லௌகிக வித்யாப்ரவசநம், ப்ரஜாபாலநம், வ்யாபாரம், வ்யவஸாயம், கைத்தொழில், ப்ரபுஸேவநம் என்று ஆறு வகைப்படும்.

வைதிக ஹிதமாவது :—ஶ்ருதிஸ்ம்ருதிதிஹாஸ புராண பாஞ்சராத்ர ஶிஷ்டாசாரங்களாகிற ஆறு ப்ரமாணங்களால் இஷ்டோபாயமாக ஸித்தமான அர்த்தம். இதைத்தான் தர்மமென்று ஶாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. வைதிகஹிதம் ஸித்தம் ஸாத்யம் என இருவகைப்படும். ஸித்தமென்பது நம்முடைய ப்ரயத்நமன்றியில் நம்மால் ஆராதிக்கப்பட்டு பலப்ரதர்களான ஆத்மாக்கள். ஸாத்யமென்பது நம்முடைய ப்ரயத்ந ஸாத்யமான தஶாராதநங்கள்.

வைதிக ஹிதமென்கிற ஸித்த தர்மமாவது :—பாகவதாசார்யரூபர்களான ப்ராஹ்மணர்களும், அக்நி முதல் சதுர்முகன் வரையிலுள்ள தேவதைகளும், பித்ருதேவதைகளும், நித்யஸூரிகளும், முக்தர்களும், பரதேவதையான ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணனும். இவற்றில் ப்ராஹ்மணனும் தேவதை யென்னுமிடம் 'யாவதீர்வை தேவதாஸ்தாஸ்ஸர்வா வேதவிதி ப்ராஹ்மணே வஸந்தி' என்றும், 'ப்ராஹ்மணோ வை ஸர்வா தேவதா:' என்று தைத்தரீய ஸம்ஹிதையிலும் 'ப்ராஹ்மணம் ஹவ்யவாஹனம்' என்று கடோபநிஷத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தேவதைகள் 'ஸர்வதேவ நமஸ்காரம் கேஶவம் ப்ரதிகச்சதி' என்கிற ஶ்ருதிகளில் சொல்லியபடி தான் பகவானை ஆராதித்துப் பகவானால் தனக்குக் கொடுக்கப்பட்ட ஸம்பத்துக்களில் சிலவற்றைத் தன்னை ஆராதித்தவனுக்குக் கொடுக்கிறார்கள். அந்த இந்த்ராதிகளுக்கு அந்தர்யாமியான பகவானை யுத்தேஶித்து யாகாதிகள் செய்கிறவர்களுக்கு இந்த்ராதிகளை அபேக்ஷிக்காமல் அந்தர்யாமியான பகவானே பலம் கொடுக்கிறான். அப்படியே ப்ராஹ்மணரூப தேவதைகளை 'தேவவிவாவாயஸ் ஸ்வாவஸீத', 'யே ப்ராஹ்மணா ஸ்ஸோஹம் ஸம்ஶய ...

ஹம யயாவஜ । தஸா நூஜஹஜ ஹஜதாஸு வ-ஜெ நீயா விஶெஷ தஃ ।'
இத்யாதி ப்ரமாணங்களின்படி ஆராதித்தால், அவர்களால் த்ருஷ்ட ரூபமான வித்யாதி பலங்களும் அவர்களுடைய அநுக்ரஹ பரதந்த்ரனான பசவானால் அத்ருஷ்ட பலங்களும் ஸித்திக்கக் காணுகின்றோம். ஆகையால் ப்ராஹ்மணர்களும் ஸித்தமான உபாயமாகக் குறையில்லை.

ஸாத்ப வைதிகஹித மென்கிற ஸாத்ய தர்மமாவது:—நித்யம், நைமித்திகம், காம்யம், நித்யகாம்யம், நைமித்திக காம்யம் என ஐந்து வகைப்படும். நித்யமாவது: அகரணே ப்ரத்யவாய கரமாயும் [அதாவது செய்யாவிட்டால் பாபத்தைக் கொடுக்கக்கூடியதாயும்], செய்தால் பாபக்ஷப ஹேதுவுமான 'ஸாநம் ஸாஂஸ்யாஜ வொ ஹொமொ தெவதாதிமி வ-ஜெநம் । வெஶ்வதெவம் ஷவெதாநி கதவ்யாநி தி நெ நெ ॥' இத்யாதி ப்ரமாண ஸித்தங்களான ஸாந ஸம்யொவாஸநாதிகள். இவை ப்ராஹ்மண க்ஷத்ரிய வைஶ்யர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் காலத்தில் முக்யமான க்ஷத்ரிய ஜாதியும் வைஶ்ய ஜாதியும் ஸ்வல்பமாயும், மிஶ்ரமான க்ஷத்ரிய வைஶ்யர்கள் பஹுளமாயும் இருக்கிறபடியால், அவர்களுக்கு வேதோக்தமான ஸந்த்யாதிகள் இல்லாமல் புராணோக்தமான தாந்த்ரிக மந்த்ரங்களால் ஸந்த்யாதிகள் அநுஷ்டாநத்திலிருக்கிறது. நான்காவது வர்ணத்தாரும் உக்தஸ்ம்ருத்யாதிகளிலும் ஶூத்ராசார கமலாகரத்திலும், வைஷ்ணவர்களுக்கு ப்ரணவரஹிதாஷ்டாக்ஷரத்தினாலும், ஶைவர்களுக்கு ப்ரணவரஹித பஞ்சாக்ஷரத்தாலும் ஸந்த்யா ஜபாதிகளும், மற்ற கர்மங்களுக்கு அவர்கள் அநதிகாரிகளாகையால் அந்த ஸ்தாநத்தில் ப்ராஹ்மணர்களின் பொருட்டு தாநமும் நித்யமாக விதிக்கப்பட்டிருக்கிறது. 'ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம்' இத்யாதி விதிகள் ப்ராஹ்மணர்களுக்கு ப்ரவசநமென்கிற வித்யாதாநத்தையும், 'தாநமீஶ்வர பாவஶ்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்' இத்யாதிகள் க்ஷத்ரியாதிகளுக்கு த்ரவ்ய தாநத்தையும் நித்ய

தர்மமாய் விதித்திருப்பதாகத் தெரிகிறது. பரமை காந்திகளு க்கு அபிமமநாதி பாஞ்சகாலிக தர்மம் நித்யமாக விதிக்கப்பட் டிருக்கிறது.

நைமித்திகமாவது:—க்ரஹணாதி நிமித்தங்களில் அகரணே ப்ரத்யவாய கரமாயும், செய்தால் பாபக்ஷய ஹேதுவுமான க்ர ஹண ஸ்நாந ஶ்ராத்தாதிகளும், பாபங்களுக்கு ப்ராயஶ்சித்தரூப மான ஸேது ஸ்நாநாதிகளும்.

காம்யமாவது:—அகரணே ப்ரத்யவாயகரமன்றியில், செய் தால் அர்த்தம், காமம், கைவல்யம், மோக்ஷம் என்கிற நான்கு வித புருஷார்த்தங்களுக்கும் ஸாதநமான தர்மங்கள். காம்ய தர்ம மானது மோக்ஷார்த்திக்கு நிஷித்தகாம்ய மென்றும் அநிஷித்த காம்ய மென்றும் இருவகைப்படும்.

நிஷித்தகாம்ய மென்பது பலவிஶேஷத்தினாலும் உத்தேஶ்ய விஶேஷத்தினாலும் உபய விஶேஷத்தினாலும் மூன்றுவிதம். முத லாவது, பசுபுத்ராதிகளுக்காகச் செய்யப்படும் பகவ துபாஸ நாதிகள். இரண்டாவது, தத்வஜ்ஞாநாதிகளுக்காகச் செய்யப்ப டும் தேவதாந்தரோபாஸநாதிகள். மூன்றாவது ப்ரஜார்த்தமான இந்த்ரதேவத்யேஷ்டி முதலானவை.

அநிஷித்த காம்யமாவது:—தத்வஜ்ஞாநம், பகவத்பக்தி, பகவத் பாகவதாசார்ய ஸம்ருத்தி இவைகளுக்காகவும் உபய விபூதிநாத னை ஸ்ரீமந்நாராயண ப்ராப்திரூப மோக்ஷத்திற்காகவும் கேவ லம் பகவத் ப்ரீதிக்காகவும் அநுஷ்டிக்கப்படும் மாலாகரண தீபா ரோபண ஸம்ப்ரதாய ப்ரவசநாதிகளும் மோக்ஷார்த்தமான பக வத்பக்தி ப்ரபத்திகளும் பாகவதாசார்ய கைங்கர்யங்களும்.

நித்யகாம்யமாவது:—அகரணே ப்ரத்யவாயகரமாயும், புத் ரார்த்தி பலேச்சையுடன் செய்தால் பலஸாதநமாயுமுள்ள ஏகாதசீ ஶ்ரவண வ்ரதாதிகள்.

நைமித்திக காம்யமாவது:—நிமித்தம் நேர்ந்த காலத்தில் அக ரணே ப்ரத்யவாயகரமாயும் பலேச்சையுடன் அநுஷ்டித்தால் பலஸாதநமாயுமுள்ள ஜாதேஷ்ட்யாதிகள். இந்த நைமித்திக காம் யங்களில் புத்ரனுக்கு ப்ரஹ்ம வர்ச்சஸாதி பலத்தை அபேக்ஷிக் காமல் ஜாதேஷ்ட்யாதிகளைச் செய்தாலும், ஆநுஷங்கிகமாக

அந்த பலமும் ஸித்திக்குமென்று சிலருடைய அபிப்ராயம். அநந்ய ப்ரயோஜநமாய் பகவத்ப்ரீதி மாத்ரத்தை உத்தேசித்து நித்ய நைமித்திகா நிஷித்தகாம்யங்களைச் செய்தாலும், 'ஶரீராரோக்யமர்தாம்ஶ்ச போகாம்ஶ்சைவாநுஷங்கிகாந் । ததாதி த்யாயிநாம் நித்யமபவர்கப்ரதோ ஹரி: ॥' என்கிற ப்ரமாணத்தினல் பகவத் கைங்கர்யாபேக்ஷித தேஹாரோக்யாதி பலங்கள் ஆநுஷங்கிகமாகப் பரமைகாந்திகள் விஷயத்தில் ஸித்திக்கின்றன.

வேதோக்த கர்மங்களை ஶ்ரத்தையுடன் அநுஷ்டித்துப் பலத்தை அடைபவர்கள் எல்லாரும் ஆஸ்திகர்கள். அதில் அதிகாரிகளின் ஜ்ஞாந தாரதம்யத்தாலே பல தாரதம்யம் பகவத் கீதாதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

முதலதிகாரி, கர்மாராத்ய தேவதாதி பரிஜ்ஞாநமில்லாமல் கர்மங்களே அத்ருஷ்ட த்வாரா பலத்தைக் கொடுக்கின்றதென்கிற அறிவுடன் பஞ்சமஹாயஜ்ஞ தர்ஶபூர்ணமாஸாதிகளை யநுஷ்டிப்பவர். இவருக்கு ஆராத்ய தேவதாஜ்ஞாந மில்லாததனல் பலம் அதிஸ்வல்பம்.

இரண்டாவது அதிகாரிகள், ஆராத்யேந்த்ராதிகளின் அந்தர்யாமியான பகவத்ஸ்வரூபத்தை அறியாமல் இந்த்ராதிகளே ஆராத்யர்களென்கிற புத்தியுடன் தர்மாநுஷ்டாநம் பண்ணுவார்கள். முந்திய அதிகாரிகளைக் காட்டிலும் இவர்களுக்குப் பலம் அதிகம்.

மூன்றுவது அதிகாரிகள், இந்த்ராதிகளுக்குப் பகவான் அந்தர்யாமி யென்று அறிந்தும் ஶீக்ர பலஸித்திக்காக இந்த்ராதிகளை ஆராதிக்கு மவர்கள். முந்திய இரண்டு அதிகாரிகளைக் காட்டிலும் இவர்கட்குப் பலம் அதிகம்.

நான்காவது அதிகாரிகள், இந்த்ராதிகளுக்கு விஶேஷணமாக வைத்து, அந்தர்யாமியான பகவானை ஆராதிக்குமவர்கள். இவர்கள் முந்திய அதிகாரிகளைக் காட்டிலும் அதிக பலம் பெறுவார்கள்.

ஐந்தாவது அதிகாரிகள், பகவத் ஸ்வரூபம் தெரிந்து தேவதாந்தராந்தர்யாமி பகவதாராதநமான காம்ய கர்மங்களை விட்டு, தனக்கு அபேக்ஷித ஐஶ்வர்ய கைவல்யாதிகளுக்காகப் பகவானை ஆஶ்ரயித்து, பக்தி ப்ரபத்யாதிகளைப் பண்ணுமவர்கள். இவர்கள் " ஏகா

ந்தி' என்று வ்யவஹரிக்கப்படுவார்கள். 'ஸாக்ஷாத் - ஸ்ரீமதி நாராயணே, ஏக: - ஸர்வஸ்வாமித்வ ஸர்வசேஷித்வாத்யுபாய நிச்சய:, ஸகாந்த:; ஸ: ஸாக்ஷாதேவேதி ஸகாந்தீ' அத்விதீயனான நாராயணனிடத்தில் ஸர்வஸ்வாமித்வ ஸர்வசேஷித்வ உபாயத்வ நிஸ்சயமுடையவரென்றபடி. இவர் 'ஞானீ த்வாத்மைவ மே மதம்' என்று கீதாசார்யனால் அருளிச்செய்யப்பட்டவர். இவர் ஏனைய அதிகாரிகளிலும் அதிஶயித பலம் பெறுவர்.

ஆறுவது அதிகாரிகள் பரைகாந்திகள். இவர்கள் ஐஸ்வர்யாதிகளைவிட்டு, பகவத் பக்தியையே புருஷார்த்தமாகப்பற்றி, ஆநுஷங்கிகமாக வஸ்வாஶிபதப்ராப்தி, கைவல்யாதிகளை அபேக்ஷிக்கிற மதுவித்யா பஞ்சாக்நிவித்யா நிஷ்டர்கள்.

ஏழாவது அதிகாரிகள் பரமைகாந்திகள். இவர்கள் ஆநுஷங்கிகமாகக்கூட இதர புருஷார்த்தங்களை அபேக்ஷிக்காமல் பகவத்ப்ராப்தியையே புருஷார்த்தமாகப்பற்றி ப்ராரப்தகர்ம பர்யவஸாந பர்யந்தமாக வர்ணாஶ்ரம தர்மங்களை அங்கமாகவும் தைல தாராவதவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்ததிரூபமான பக்தியோகத்தில் உஹரவித்யோபகோஸலாதி வித்யாதிகளை அங்கியாகவும் அநுஷ்டிக்குமவர்கள். இவ்விருவரும் 'ஜ்ஞாநீ' என்று கீதையில் அருளிச்செய்யப்பட்டவர்கள்.

எட்டாவது அதிகாரிகள், ஷோடஶ வர்ண ஸ்வர்ண பரமைகாந்திகள். இவர்கள் ஸதாசார்ய கடாக்ஷத்தினால் தத்வஹித புருஷார்த்த ஜ்ஞாநத்தை ஸம்பாதித்து, ஆசார்யோபதிஷ்ட மார்க்கத்தினாலே ஸ்வநிஷ்டா, உக்திநிஷ்டா, ஆசார்யநிஷ்டா என்கிற மூன்றின் ஒரு ப்ரகாரத்தால் ஸ்ரீமந்நாராயணனிடத்தில் அங்கபஞ்சக ஸம்பந்நமான ஆத்மரக்ஷாபர ஸமர்ப்பணம்பண்ணி நிர்ப்பாராய், தத்க்ஷணத்திலேயே க்ருதக்ருத்யர்களாய், முக்தர்களைப்போல் மோக்ஷத்தையும் ப்ரயோஜநமாக உத்தேசிக்காமல் கேவல பகவத் ப்ரீத்யர்த்தமாய், 'ஸதீவ ப்ரியபர்தாரம் ஜநநீவ ஸ்தநந்தயம்' இத்யாதி க்ரமமாக பகவத் பாகவதாசார்ய கைங்கர்யபரர்

களாகிய பராங்குச பரகால யதிவர நிகமாந்த மஹாதேசிக ப்ர ப்ருதிகளும் தத்ஸம்ப்ரதாய நிஷ்டர்களான ப்ரபந்ந பரமைகாந்தி களும்.

இப்படிப்பட்ட பாரமைகாந்த்யத்துக்கும் பரம புருஷார்த் தத்துக்கும் ஆநுஷங்கிகமாக ஸர்வ புருஷார்த்தங்களுக்கும் ஸாதந மாகிற பக்தி ப்ரபத்திகளாகிற ஸாத்யோபாயங்களையும் இவைகளி னால் வசீகார்யனான ஸ்ரீப:பதியின் ஸ்வரூபத்தையும் அநேககோடி ஜந்ம ஸஞ்சித ஸுக்ருத வித்தன் தான் அறிந்து கொள்வனென்று 'யே ஜந்மகோடிபி: ஸித்தா: தேஷாமந்தேத்ர ஸம்ஸ்திதி:' என்றும், 'ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதிபி:। நராணாம் க்ஷீண பாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே ॥ ஸங்கல்பாதேவ பகவாந் தத்த்வதோ பாவிதாத்மநா। நாஹம் ததி சரணத்வஸ்ய குஷாம் கோடி தஸ்யவி। பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே। வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: ॥' இத்யாதிக ளால் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இவ்வர்த்தத்தை 'விஸ்ராந்த் ஜிஜ்ஞாஸவ: ஸம்யக் விதிவர்த்தநம் பஹிஷ்கரிஷ்யந்தி நவநீதஸம்பந்நாய நமதி ஸ்ரவ்யாவி நாமக்ஷிதா:। ஸ்வர்க்க ஸ்வர்க்கவாஸாய நதபாஜோ வஞ்சிஷ்யாணம் ப்ரதள ஸதத்யோ ஷாம ஸம்ஜதஸந்நியி வைஸ்வாநரவயிஸ்ரவயி: ॥' என்று நம்தேசி கருபனான ஸ்ரீ திருவேங்கடமுடையான் அருளிச்செய்தார்.

(இன்னும் வரும்.)

---

ஸ்ரீ:

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | | | | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 7. | வேதாந்ததீபிகை ஸம்புடம் | III | ... | ... | 1 | 0 | 0 |
| | Do | V | ... | ... | 1 | 0 | 0 |
| | Do | VI | ... | ... | 1 | 0 | 0 |
| | Do | VII | ... | ... | 1 | 8 | 0 |
| | Do | VIII | ... | ... | 3 | 0 | 0 |

ஸ்ரீ꞉.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம꞉.

# பஞ்ச ஸம்ஸ்கார விசாரம்.

(தொடர்ச்சி.)

அங்குலீயகாதிகள் அசேதநங்களாகையால் அப்படியாகும்; இவன் சேதநனானதால் அப்படியாகுமோ வென்னலாகாது. 'அஜஸ்ரம் ஜுஹ்வதஸ்ஸதே' இத்யாதிப்படி அசேதநத்திலுள்ள சேதநனுக்கு ஶாஸ்த்ரஸித்த நிஷேதமில்லை. இவனுக்கு 'யாமாம் யாம' ஆயம்' இத்யாதியால் நிஷேதம் ஸித்தம். 'ஶாஸ்த்ரதப்தா꞉' என்கிற பதமொன்றுயிருக்க அவ்வோவிடங்களில் அநுஷ்டாநபேதம் ப்ராமாணிகமென்ன வொண்ணாது; லாஞ்சநத்தில் பேதமில்லாமையால். தாத்வர்த்தத்திலும் ப்ரத்யயார்த்த விதியிலும் பேதம் கொள்ளவில்லையே. ப்ரகாரபேதம் அதிகாரி காலாதிபேதம் போல் கிஞ்சித்கரம். 'ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரேந்த்ராதீஷ்ஸவவேல் ஸம்ப்ரஸங்கயநே' என்கிற வாக்யத்தில் அவதரண ப்ரகார தஶைதா பேத மிருந்தாலும் ப்ரக்ருதி ப்ரத்யயார்த்தங்களில் பேதமில்லாமையால் அவிருத்தமென்று ப்ராமாணிகர்கள் அங்கீகரித்தார்களிறே. இத்திருவிலச்சினை தானும் ஸ்வநிரோஸமேதோஷ்யஜ்ஞ ஸ்ரீவத்ஸாயமே ஸமேஷாயாத்மகமாக ஆத்மாவுக்கு ப்ரதிபந்தகத்யா சிறைக்கூடாக இருந்துள்ள தேகத்தைப் பகவத் கைங்கர்யோபயோகியாக்கவல்லதாகையால் ஸம்ஸ்கார ரூபமாய் 'வதிவ்ருதாநிநித்தம் ஹிவவயாதி விஷ்ணும்' என்கிறபடி பகவதநந்யார்ஹஶேஷத்வ ஸம்பந்தத்யோதகதயா பரம மங்களமாய், தத்காலத்தில் பாதாவஹமாகையால் ஶரீரோபேக்ஷாத்யவஸாயாசார்ய பாரதந்த்ர்யாதி ஸூசகமாய், 'வக்ரம் தத்ர வ்ருஶாஸிஹி' இத்யாதியின்படியே தேவதாந்தர ஸ்பர்ஶ நிரோதமாய், 'யாவத்தேவஹிரே வக்ரம் ஸஜீவஸ்ய ஶ்ருதஸ்யவா', 'தவமதிரயவாமோஷ்யிவக்ரஶ்ருதி

ஹதவீயடீ் ஸஙஸ்ய வொ நுயொக்யஃ' இத்யாதி வசநஸித்த யஜ்ஞோதாதி வ்யஸஹ நிரொயகமாய், லோகத்வாரபூத ஸூதர் ஶந ஸம்பந்தத்தால் பகவத்ஸாதாரண தேஶப்ராப்தி ஹேது வாய், இன்னும் அநேக ப்ரகாரங்களாலே ஐஷ்டாநிஷ்டா வாத நாவநொநாதந ப்ரவணமாய், 'ஸக்ருதேவஹி ஶாஸ்த்ராயடீஃ' என்னும்படி ஸம்ஸ்காரத்வத்துக்கு ஸக்ருதநுஷ்டாநமே போந்து கார்யகாரியாயினும், லாஞ்சந ஸித்திக்காகவும், ஜாதகர்மாதி ஸம் ஸ்காராந்தர ஸாதாரண்யாவாதகத்வத்தாலும், பித்ராசார்யாதிக ளாலும், ராகப்ரேரிதனை தன்னாலும் நிர்வர்த்த நீயமாய், அவ்வோ ஆதாராநுரூபமாக ஸமந்த்ரக அமந்த்ரகாதி வஹுப்ரகார நிர்வர் த்யமா யிருப்பதொன்று. இவ்விஷயம் நிரூபித ப்ரமாணங்களா லும், 'ஶஜ்வக்ராக்ஷநஂகாயடீா ஷாதெநா வாஹாஜெயொஃ' கஜ்ராவதஂ ஜதெஷ வஶாதி ஷவஜெதயொஃ' இத்யா தியாலும் ஸித்திக்கும். இங்கும், 'காயடீாகு' என்னும் பதத்தை கஜஹடீாவி தணிகூமாக அநுஸந்தித்து, 'காாயெசு' என்னும் அர்த்தத்தில் பர்யவஸாநம் செய்யலா மென்றாலும், 'வாஹ ஜெஂ வஂதெஹஜி ஶதவஸாயுஷஃ। கயவா நெநகெநாவி வெவஷ்வெந ஜெஹாதநா॥' என்கிற வமெநு ஸம்ஹிதா வச நத்தினுடைய ஏகார்த்த மாகையால், இவ்விடத்தில் 'கயவாநெந' என்று இதானாலுமாக அமையுமென்று ப்ருதமடீத்தியால் ஸ்வ மாத்ரகர்த்ருத்வோப ஸ்தாபகமென்றே ஸித்திக்கத் தட்டில்லை.

ஆக இந்த சக்ராங்கநம் ப்ரதிஷித்தாதிகாரிக்கு ஆசார்யாதி நிர்வர்த்திதமும், அது தெரியாமற் போனபொழுது தக்கல்பான இதரரால் செய்யத்தக்கதாகியும், ப்ரவலோத்கண்டை உளதாயின் தன்னாலும் செய்து கொள்ளத்தக்கதாகியும், நிஷித்தாதிகாரி திறத் தில் ஸம்ஸ்காராந்தர ஸஹசரித மாகாமல் யாரேனு மொருபாக வதரால் ஸமீபோபஸரணத்தில் ப்ரதிஷேத மில்லாமையையும், அதிகாரியினுடைய ஆசையையும் பார்த்துச் செய்யத்தக்கதாகி யும், தடீஶஷ தன்னாலாவது செய்துகொள்ள அநுமதி செய்யப் பட்டதாகியும் ஶாஸ்த்ர ஸித்தம்.

ஆகையால், வ்ரீஹியில் முஸலாக்ர ஸ்பர்ஶத்தாலே 'வ்ரீஹீந வஹந்தி' என்கிற ஶாஸ்த்ரம் அநுஷ்டிதமானாலும் த்ருஷ்ட பல வைதுஷ்ய ஸாபேக்ஷதயா வைதுஷ்ய ஸித்திபர்யந்தம் அநுஷ்டேயமாவதுபோல், ப்ரக்ருதமும் சிஹ்நஸாபேக்ஷ மாகையால் சிஹ்ந ஸித்தி பர்யந்தமாக இருக்கும். சில இடங்களில் சில ஸம்ஸ்காரங்களை அபேக்ஷித்திருப்பதனால் அங்கும் இது அநுவர்த்தநீயமாக அமையும். ஸ்ரீ இளையாழ்வார் முதலானார்க்கு ஜாதகர்ம காலத்திலும் மந்த்ர க்ரஹண காலத்திலும் இது அநுஷ்டித மென்பது அவரவர் சரித்ததினால் விளங்கும். ஆகையால் சண்டாளனுக்கு ஸ்வயம் அநுஷ்டிதமானாலும் கார்யஸித்திக்குக் கண்ணழிவில்லையென்பது உரைக்கப்பட்டிருப்பதாலும், இதரனாலாகில் அப்ரஸித்தனால் அமையு மாதலாலும், ஸமீபோபஸரணத்தில் நிஷித்தரான ஸ்ரீ வைஷ்ணவருக்கே இது சுமையன்று என்று அறிவது. இன்னமும் சேதநனை வாசிக்கு ஸ்வரூபஸர்ப்பணம் செய்து உய்வதற்கு உடலான கரணகளேபரங்களை வீணாக்கி இழப்ப தொவ்வாது என்பது, சண்டாள தஜீதரர் திறத்தில் ஸமமாக இருந்து வைத்தும், ப்ரக்ருதம் இவர் திறத்தில்மாத்ரம் திருவுள்ளம் குடி கொண்டிருப்பதால் அநுமிக்கத் தக்கதாகிய அபிமாந விஶேஷமொன்றே 'பஶுர்மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவஸம்ஶ்ரயா: । தேநைவ தே ப்ரயாஸ்யந்தி', 'யம்யம் ஸ்ப்ருஶதி பாணிப்⁴யாம் யம்யம் பஶ்யதி சக்ஷுஷா, ஸ்தா²வராண்யபி முச்யந்தே', 'ஶ்ரம்க்ஷண ய்யாந ஸம்ஸ்வப்நேऽபி த்ஸ்வப்நேऽபி விஹங்க³மா:', 'ஜொஷயந்தி ஸுகாநு வாத்³ராம் ஸத்³கு³ணித வ்ருத்தய: ।' இத்யாதிகளிற் சொன்னபடியே அவர் வானேறப்போமளவும் வாழ்வுக்கமைந்திருக்க இவ்வளவு யத்நந்தானும் வேண்டுமோ? இவைகளிற் சொல்லும் ஸ்பர்ஶம் நிஷித்தமாயினும் தர்ஶந த்யாநங்களிற் குறையில்லையே. ஸாமாந்ய ஶாஸ்த்ரம் ஸமீபோஸரணாதிகளை நிஷேதித்தபோதிலும்; அத்வேஷாபிமுக்யங்களால் இவர் திறத்தில் பகவத்பக்தி அநுமிதமாய் அதுவும் துர்ஜாதிதோஷத்தைப் போக்கி அதிகாரத்தை உண்டுபண்ணிற்றாகில் பண்டைக்குலம் தவிரா

தோ என்கிறதும் அநுபபந்நம். இந்த ஆபிமுக்யம் தானும், ஹரவ தாரய ஹ்ருதயம் தஸ்ய வஹாநிதி ஸம்வாத நாதிக்ஷாத்ரு ஜெந்ராரயாஞாநாஞ ரிதகேவ. நாந்யா ஸிஜ்மாகையாலே, பரஸ்பர்த்தி அப்ரத்யக்ஷமாதலால் இது சொல்லவொண்ணாதேயென்னில், இந்தக் காரணத்தினாலே இதுவும் சொல்லவொண்ணாது. வாஹ்யவேஷம் ஒத்திருந்ததேயாகிலும் அந்தரங்கசுத்தியில்லாமல் அதிகாரம் சைபுகுராதிறே. இவ்வர்த்தம் விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயாதிகளில் பரக்கக் காணலாம். ஆனால், ஸ்ரீ ஆளவந்தார் மாறனேரி நம்பியைத் திருத்திப்பணிகொண்டு அந்தரங்கராக்கிக்கொண்ட தெங்ஙனம் சேரும்? அங்கும் இந்த ந்யாயம் துல்யமன்றோ வென்னில், உரைப்போம்.

மாறனேரி நம்பி விஷயமாய்ப் பெரிய நம்பிகள், 'பெரிய உடையாரிலும் இவர் தாழ்ந்தவரோ? பெருமாளிலும் யான் சிறந்தவனோ?' என்று எம்பெருமானார்க்கு அருளிச் செய்தமையால், அதிகாரி பூர்த்தி இவ்விடத்தில் உண்டென்று ஸித்திக்கிறது. 'வேதகப்பான்போலே இவர்களோட்டை ஸம்பந்தம்' என்று, புகழும்படியான அதிகாரிகளில் இஸ்ஸம்ஸாரத்தில் ஒரொருவர் உண்டாகில் எத்தனைகாண் அல்லாதார்க்கு மிது உண்டாய்த் தென்பது பொருந்தாதிறே. இன்னமும் அவர்கள் அநதிகார பூர்த்தியைக் கணிசித்தல்லது ஶாஸ்த்ர மர்யாதாதிக்ரமம் செய்யவிரகில்லாமையால் ஸர்வஜ்ஞ ஸர்விஜ்ஞாநமான மாஹாத்ம்யம் அஸ்மதாதிகளுக்குப் புலப்பட்ட தென்பது அதிஸாஹஸம். ப்ரபந்நனுக்கு இந்த ஶாஸ்த்ர நிர்ப்பந்தமுண்டோ வென்னில் உத்தரம் உரைத்திட்டோம். ஶாஸ்த்ராதிக்ரமத்துக்கு என்று ஏற்பட்டதன்றே ப்ரபத்தியும். 'இவனது செய்யான்', 'பொன்விலங்குக்கு அஞ்சுகிறவன் இருப்பு விலங்கிட்டுக் கொள்வனோ?' என்றிப்புடைகளிது வெளியாகும். வாக்யைக வாக்யத்வத்தாலன்றோ ஶாஸ்த்ரம் நிர்ணயம் செய்யவமையும். ஆகையாலிறே ஸர்வஶாகாப்ரத்யய ஸர்வவேதாந்த ப்ரத்யய ந்யாயங்கள் ஏற்பட்டுள்ளன. உபக்ரமாதி தாத்பர்ய லிங்க ஷட்க பராமர்ஶ பூர்வமாக அநாஜ்ஞா

சார்ய பரம்பரா பரிப்ராப்த ஶாஸ்த்ரார்த்த நிர்ணயம் பண்ணு கையன்றோ நம் பூர்வாசார்ய ஸம்மதமான மார்க்கம்.

இன்னமும் ப்ரக்ருத கலிக்ஷோபத்தால் இவர்களுக்கு ப்ராஹ்மணுதிகள் திறத்தில் உண்டான பரிக்ஷோபத்தைக் கண்டு, அதற்கோர் ஆணையிடுவதாகத் திருவுள்ளம் பற்றுவதும் ஸித்த ஸங்கல்பனை ஸர்வேஶ்வரனது திருவுள்ளத்துக்குக் கடையாகில் கார்யகாரியன்று. அப்படியில்லையாகில் யத்நமும் வேண்டா. உஜ்ஜீவந ஸங்கல்பமில்லாமல் உபாத்யந்தரத்தால் உண்டாகில் இருவருக்கும் அவத்யாவஹமாகுமித்தனையேயன்றி, உலகுக்கும் மஹோபகாரமாகுமென்பதில் தட்டில்லை. ‘யஶ்ய உபாவிஸம்வாஷா உஹதெத்வஹிவாவகஃ’ என்னும் ந்யாயத்தால் இதராபிஸந்தியால் செய்தாலும் இதன் ஸ்வரூபங்கெட நில்லாதே என்பதும், ப்ரபல ப்ரத்யவாய போதக ஸ்ம்ருதி வசநங்களாலும், ஸ்ரீ பெரிய பட்டர் முன்னோரின் நிர்ணயத்தினலும் பாதிதம். ‘நஹிவசநவிரோயெ ந்யாய ஶதம் ப்ரவவதி’ ப்ரமாணந்தரா போசர தர்மாதர்ம விஷயத்தில் ஶப்த ப்ரமாண மொன்றே நிர்ணயகம். ஆனல், மாறனேரி நம்பி ப்ரப்ருதிகளின் விஷயத்தில் செய்த அநுவர்த்தந மெல்லாம் வ்யக்தி விஶேஷ நியதமென்றோ அபிப்ராயமெனில் இது அநுக்தாரோபம். வ்யக்திவிஶேஷத்திலும் கல்பகஹேதுவொன்று கொள்ளாவிடில் சூத்ரஶ்ய வ்யஹிவார தோஷப்ரஸக்தியுவார்யமாதலாலும், மேயவஸித்தி மாநாதீந மானதாலும், ‘ஹதிஸஷ வியாஹெ்யஷா யஸிநெ்ரவஹி வதலெத, ஸவிஶெ்ரா ஶிஶ்ரீ ஶாநு ஸயதிஸவ வணிதஃ, தவெஸவெயம் தவெதாத்ராஹ்யம் ஸவவலெஜ்யா யஶாஹ்யஹம்’, ‘குலந்தாங்குசாதிகள் நாலிலுங் கீழிழிந்து’ இத்யாதிப்படியே அஜ்ஞாத ஸுக்ருதாதிமூலக பகவத் ப்ரஸாதமடியாக ‘சுவிதித விஷயாஶாஃ’ ‘உண்ணுஞ்சோறு’ ‘ஏகாந்தமில்லை யிருளில்லை’ ஐகாந்த்யாஷ்யஷநிஷ்டை பிறந்த ‘ஜ்ஞாநீஶ்வா மெதவமெ’ என்னப்பட்ட பரமபாகவதோத்தமர் அதி துர்லபராகவும் ‘ஶாஷுவெஷ நகஶந’ என்றும் சொல்லப்பட்டிருப்பதால், கண்ணுக்குத் தோற்றினபேரெல்லாரும் அவ்வதிகாரிகளே என்பது அநுசிதம். அப்படி

ஒரொருவர் உண்டாகிலும் அவர் ஸ்ரீ பாத தீர்த்தாதி நிஷேவணத்துக்கு உசிதரேயன்றி, அவர் நமக்கு ஶிஷ்யரென்பது மஹாபராதமாகும். அவருக்குத் தானும் உஜ்ஜீவகம் வேண்டாவோ வென்னில், ஆத்மகுணங்கள் வெளிவருகின்றன. மயர்வற மதிநல மருளப்பெற்றிருப்பதே அவர்திறத்தில் ஸ்வபர நிர்வாஹகரென அறியவும். இன்னமும் இப்படி ப்ரமாண ஶரணர் யாம் சொல்லவிட்டிருக்கும் விஷயங்களையும் ஆராய்ந்தருள்வாராக.

ஆக இந்த விசாரத்தால் ப்ராமாணிக கோஷ்டியிலுள்ளோர் அனைவரும் தாம் தாம் குலசரண கோத்ர ஸூத்ராதி நியமங்களைக் கடந்ததில்லை யானதாலும், அதிக்ரமிப்பது பகவதாஜ்ஞாதிலங்கநமானதாலும், வ்யாபகத்வமாவது ஬ஹுவ்யக்தி நிஷ்டமாக்கி, அது தானும் ஜாதிநிஷ்டமாய் விஶேஷ தர்மங்கள் க்வாசித்கமா யிருக்க வேண்டியிருக்க, ஸகல வ்யக்திகளும் விஶேஷ தர்மாக்ராந்தங்களென்று காலாத்யயாபதிஷ்டமாகச் சொல்லிக்கொண்டு பகவந் நிர்ணீத ஸித்தாந்த வ்யவஸ்தாபகத்தில் துணிவது தகாததலாலும் தாஸ்யாதிகாரி ஒரொருவர் இருந்தாலும் அவரும் 'உத்ஸீதேயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம்' 'ந புத்திபேதம் ஜநயேதஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம்', 'விஹிதஸ்யாச்ரமஃ கர்மணோ நாவஸ்யதே', 'மோஹாத்தஸ்ய பரித்யாகஃ தாமஸஃ பரிகீர்த்திதஃ', 'கர்மம் கைங்கர்யத்திலே புகும்' இத்யாதி ப்ரமாண ஶரணர் வர்ணாஶ்ரம தர்ம வ்யவஸ்தாபித கர்மாநுஷ்டானத்தைச் சிறிதேனும் கடக்கக்கூடாமையாலும், பகவதபிமுக்ய தத்பக்ரமாதி மாத்ரமே பாரமைகாந்த்யமாகாமல் ஸஜ்ஜாவஸக்தாந ஸஹவாஸ ஸதாநுஹவயோக்யதா நிவர்த்தக 'பக்ஷ்யாம் ச்ரோத்ரவதீ', த்வ்யபக்ஷ்யாணி காதிவாக்யைகோஜ்யாதி ஸதைவதஶவிய தஶாவஸி வாகங்களும் இவர் திறத்தில் உள்ளனவாகையாலும், பூர்வோக்தைகாந்தி பரமைகாந்தித்வங்கள் மாத்ரமே 'லோகாஞீப்யவசேஷ வேத்யா நைவஶாஸ்த்ரைர்யாதிபிஃ । விஷ்ணுநா வ்யவசேஷ்வ்யஃ' என்று ஬ஹுப்ரகார விஷயதயா நிர்ணீத மாகையாலும், அவருக்கு மாத்ரமே 'தஸ்யஸர்வம் ஸ வந வஹி' என்கிற அதிகாரம் கைபுகுந்து மற்றோர் திறத்தில் இல்லாமையாலும், பரமைகாந்தி விஷயத்தில் ஒக்கும் பரிமாற்றம் எல்லாம், இதரரிடத்தில் செலுத்தி

பூஸா நக்ஷத்ரஸமாக்குவது கூடாமையாலும், புஷ்பத்யாமபோகமண்டபங்களிற் பண்ணின காயாங்கஸ்தலசுத்தியும் அதிகாரநிரூபணமின்றி, ஸர்வ ஸாதாரணமாக ப்ரவர்த்தியாமையாலும், அதிகார நிரூபணம் செய்ய இன்றியமையாத ஸார்வஜ்ஞரும் நம் திறத்தில் இருப்பதாக நாம் நிர்ணயித்துக்கொள்ளக்கூடாமையாலும், அதிகாரி ஸௌலப்ய மிருந்ததாயின், 'அவர்கண்டீர் எம்மையாளும் பரமரே' என்று ஆழ்வார் முதலானோர் கொண்டாடும் நிஷ்டையுடையவரை ஶிஷ்யனாக நினைத்துப் பரிமாறுவது மஹாபசாரமாகையாலும், ப்ரக்ருத கலிக்ஷோபத்தினால் ப்ராஹ்மணேதரருக்கு ப்ராஹ்மணரிடத்தில் உண்டான த்வேஷம் நசிக்க இது உபாயமாகாமையாலும், பரிஹாரத்தில் இதைச் சேர்த்துக்கொண்டாலும் உபர்யுபரி துராசை விஞ்சி ஸர்வ வ்யவஸ்தா பங்கம் எதிர்பார்க்கப்படுவதாலும், ஸ்ரீ வைஷ்ணவத்வம் ப்ராஹ்மண்ய வ்யாபகமாகாமையால் ஓரிடத்தில் பரிஹரித்தபோதிலும் மதாந்தரநிஷ்ட ப்ராஹ்மணர் திறத்தில் தத³வஸ்தமாகையாலும், வைஷ்ணவத்வேந ஸஜாதீய ப்ராஹ்மணானுக்ரஹ மாத்ரேண த்ருப்தியடைவதிலும் தோஷ முக்தமாகையாலும், 'நஜாத்ருகாளோ ஹ்யாளு ஜொஹாலுச்ஜ்யஜெஜ்ஜீவி தவஸ்யாவிஹெஹெதா:', இத்யாதி பஞ்சமவேதாதிகளின் நிர்ணயத்தின்படி ராகத்வேஷ பய லோபாதிகளினால் பகவதாஜ்ஞாவலித்த தர்மாதிக்ரமம் செய்யத்தகாமையாலும், ராஜஸ தாமஸ த்யாகம் அநர்த்தாவஹமே யாகுமென்று ஸ்ரீ பகவத்கீதாதிஸித்தமானதாலும், வாஞ்ராஹிரவலிதரான சண்டாலம்லேச்ச புல்கஸாதிகளுக்கு ஸம்ஸ்காரங்களைச் செய்ய ப்ராஹ்மண ஸ்ரீ வைஷ்ணவருக்கு அதிகார மில்லையென்றே விளங்குகிறது. கேவல சக்ராங்கனத்தில் அவர்க்கு அபிப்ராய மிருந்ததாயின், விஹகேந்த்ர ஸம்ஹிதாதிகளின்படி, தாமே தம் பாஹுமூலங்களிலும் தம்முடையவர் பாஹுமூலங்களிலும் செய்துகொண்டு பகவத் பக்தி லேசத்தால் உஜ்ஜீவிக்கலாம். அதவா, ஶூத்ராதி வர்ணத்திற் பிறந்து, சண்டாலாதிகளை ஸமீபிக்க அஸிஷித்தரான பகவத் பக்தரால் சக்ராங்கமாத்ரத்தை ஸம்பாதித்துக்கொண்டு பகவத் ஸம்பந்த பாவனையால் உஜ்ஜீவிக்கத் தட்டில்லை. இப்படி நியமனத்தின்படி ஶாஸ்த்ர நிர்ணயத்தை யதாபுத்தி விப்வம் ப்ரகாஶிப்பிக்கலாயிற்று.

ஸ்ரீ. தி. அ. தி. குமாரதாத தாஸநு.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பக்தி ஸ்வரூப நிரூபணம்.*

இந்த ஸதஸ்ஸில் யான் பக்திவிஷயமாய் என்னால் கூடிய வரையில் உபந்யஸிக்க யத்நித்திருக்கிறேன். 'இளைய புன்கவிதையேலு மெம்பிராற் கினியவாறே' என்கிறபடியே இது ஏதாகிலுமாம்; இந்த ஸதஸ்ஸிலுள்ள மஹநீயர்களுக்கு என்னிடத்திலே வாத்ஸல்யத்தினாலே போக்யபுத்தி உண்டாயிருக்கக் கூடுமென்பது எனது மநோரதம்.

பக்திஸ்வரூபம், அதற்குக்காரணம், அதனால் உண்டாகும் அவஸ்தா விசேஷங்கள், அதனுடைய பலம் இவைகள் இங்கு க்ரமமாக உபந்யஸிக்கப்படும். பக்தியாவது, உத்க்ருஷ்ட விஷயத்தில் அபக்ருஷ்டனாலே செய்யப்படும் ப்ரீதி விசேஷம். எம்பெருமானுடைய உத்கர்ஷத்துக்கும், அவனைப்பற்றி நமக்கு இருக்கும் நிகர்ஷத்துக்கும் ஓர் முடிவில்லை. எம்பெருமானுக்கு, தேசத்தாலும் காலத்தாலும் நியந்த்ருத்வத்தாலும் உண்டான உத்கர்ஷத்துக்கு முடிவில்லையிறே. ஆகையாலே ஈஶ்வரனைக்குறித்துச் சேதநன் பண்ணுகிற ப்ரீதியைப் பக்தியென்னத் தட்டில்லை. அந்த பக்தியானது தனக்கு விஷயபூதனான பகவானுடைய போக்யதையினாலே தானும் நிரதிஶய போக்யமாயிருக்கும். காமிநீ ஜிஜ்ஞாஸையானது போக்ய பூதையான காமிநீ விஷய மாகையாலே போக்யமாகுமாப்போலே பக்தியினுடைய போக்யதையும். இதையே, மழிசைக்கிறைவனும் திருச்சந்த விருத்தத்தில், 'காதலின்பமாகுமே' என்று அருளிச்செய்தார். மேலும், அந்த பக்தியானது அவிச்சிந்நமாயிருக்கும் (அதாவது இடைவிடாமலிருக்கும் என்றபடி). இதன் போக்யதையினாலே வேறு விஷயம் இதில் தோற்றாது. உலகத்திலே அபிமத விஷய ஸ்ம்ருதி 'ஸுஹ்ருதிதாநு ஹாவம்' என்கிறபடி கண்டால் இதற்குச் சொல்லவேணுமோ? கிம்வ - இது தர்ஶநஸமாநாகாரமாயிருக்கும். அநவரத பாவநையாலே அப்படி இருக்கை உசிதமிறே. அவ்வநவரத பாவநையாலேயே நம்மாழ்வாருக்கும் பிராட்டிக்கும் மாரீசனுக்கும் தர்ஶ

* இது, சென்ற மார்கழி மாஸத்தில் நடந்த ஸ்ரீவைஷ்ணவ ஸதஸ்ஸில், ஸ்ரீ. உ. கோயில் கந்தாடை வித்வான் அப்பனையன் ராமாநுஜாசார்ய ஸ்வாமியாற் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

நஸமாநாகாரமாய்த் தோற்றிற்றிறே. 'நண்டென் கமலமலர்பாதம்', 'பக்த்யா த்வநந்யயா ஶக்ய:', 'வ்ருக்ஷே வ்ருக்ஷே ஹி பஶ்யாமி', இத்யாதிபாலே ஸித்தம். இந்த பக்திக்கு அவஸ்தா த்ரயமுண்டு. 'உத்பந்நா பரபக்தி: ஸ்யாத் பரஜ்ஞாநம் ததா ஸங்கம: । புநர் விஶ்லேஷபீருத்வம் பரமா பக்திருச்யதே' என்கிறபடியே பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தி எனப்படும்.

ஆக, கீழ்ச்சொல்லிய ஆகாரங்கள் ஸ்வாதிகாரமான ஸாத்ய பக்திக்கும் த்ரைவர்ணிகாதிகாரமான ஸாதந பக்திக்கும் ஆக இரண்டுக்குமே ஸமாநம். ஸாதந பக்திக்குக்காரணம் கர்மமும் ஜ்ஞாநமும். 'ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு' இத்யாதிகள் இதற்கு ப்ரமாணம். இதையே ஸ்ரீ ஆளவந்தாரும், 'உபய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய ஐகாந்திகாத்யந்திக பக்தியோகலப்ய:' என்று கர்ம ஜ்ஞாந ஹேதுகமென்று வெளியிட்டருளினார், இது த்ரைவர்ணிகாதிகாரமான பக்திவிஷயம். ஸர்வாதிகாரமான பக்திக்குக் காரணம் எம்பெருமானுடைய குணாநுபவம். அதாவது, சிலருக்கு ஸ்ரீமத்ராமாயண ஸ்ரீ பாகவத திவ்ய ப்ரபந்தங்களிலே எம்பெருமானுடைய திவ்யசரிதங்களைக் கேட்பதினாலும், ராமக்ருஷ்ணாதி விபவங்களுடைய திவ்ய மங்கள விக்ரஹாநுபவத்தினாலும், அர்ச்சாவதார ஸௌந்தர்ய தர்ஶநத்தினாலும் தத்காலம் பக்தி உண்டாகிறது. குலசேகராழ்வாருக்கு ராமாயண கதாஸ்ரவணத்தாலே யிறே பக்தி விளைந்தது. சைவ ஸமயத்திலிருந்த எம்பாருக்குத் திருவாய்மொழியிலே ஒரு பாசுரத்தைக் கேட்டிறே பக்தி உண்டாச்சுது. விதுர ஶபர்யாதிகளுக்கு ராமாதி விபவ ஸௌந்தர்ய தர்ஶநத்தாலேயிறே பக்தி உண்டாயிற்று. பட்டருடைய புருஷகார மடியாக ஓர் தாஸீ ஸக்தனுக்கு ஶப்தாதி விஷய ப்ராவண்யம் நிவ்ருத்தமாய் நம் பெருமாளிடத்தில் பக்தி விளைந்தது. 'பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்' 'காதல்கடல்புரையவிளைவித்த காரமர்மேனி' இவைகள் இங்கு ப்ரமாணங்கள்.

பக்தி க்ருதாவஸ்தா விஶேஷங்களாவன. 'பாற்பால் மனம் சுழிப்பமங்கையர்தோள் கைவிட்டு' என்றும், 'பராத்மநி யோ ரக்தோ விரக்தோऽபராத்மநி' என்றும் சொல்லுகிறபடியே, இதர விஷய வைராக்யத்தை உண்டுபண்ணும் ஓரேவிஷயங்களிலே உண்டான அபிநிவேஶம் ததிதர வைராக்யத்தை உண்டுபண்

ணத்தட்டில்லை 'ஹாவோ நாந்ருதம் வதி', 'அச்சுவை பெறினும் வேண்டேன்' இத்யாதிகள் ப்ரமாணங்கள்.

பெரியாழ்வாருக்கும் குலசேகராழ்வாருக்கும் அந்த பக்தியானது தாயான தசையை உண்டாக்கிற்று. 'அஞ்சுவன் நீயங்கு நிற்க அழகனே!', 'தண்ணந் தாமரைக் கண்ணனே! கண்ணே!' இவைகள் இந்த ப்ரமாணம். நம்மாழ்வாருக்கு அது நாயிகாவஸ்தையையும் மோஹத்தையும் உண்டாக்கிற்று. 'அஞ்சிறைய மடநாராய்!' தொடங்கி அநேக திருவாய்மொழிகளும், 'பிறந்தவாறும்', 'பத்துடை யடியவர்க் கெளியவன்' என்றும் இவைகளைக் காண்க. ஸ்ரீ நாதமுநிகளுக்கு மேகதர்சநத்திலே மோஹமுண்டாச்சுது; இது பக்தியின் கார்யம். நாமும் எத்தனையோ காலங்களில் மேகத்தைப் பார்க்கிறோம். ஆனபோதிலும் பக்தியில்லாததாலே மோஹமில்லை. ஜ்ஞாநிகள் பக்தியையே சிறந்த ஆபரணமாக நினைப்பார்கள். 'செல்வமும் சிறந்திடும்', 'முக்ஷிணா முக்ஷிஸம்வஹ:' இவைகளைக்காண்க. ரக்ஷகபாபத்தை மாருட்டி மங்களாசாஸநத்திலே மூட்டும். ஸாரத்யங்களைச் செய்விக்கும். 'தவநிபதி கருணை சிறு வாணவஸ்யம்ஷநாஸ்வாநு' இத்யாதி ப்ரமாணம்.

ப்ராக்ருதி ஸப்பந்தமற்று எம்பெருமானை அடைதல்:—பக்தியை இவன் ஸாதநமாக்கினாலும் ஆக்காவிட்டாலும் அதன் கார்யத்தை அது உண்டுபண்ணியே தீரும். நெருப்பைச் சுடுமென்று எண்ணாவிடினும் சுடுவது தப்பாதிறே. 'வ்யுஹவிஷாவேதாதிவரம்', 'ஸக்த்யா கவநந்யா ஸக்ய:' இத்யாதி ப்ரமாணங்கள் உள. குலசேகராழ்வாரும் முகுந்தமாலையில், 'தாவதீ ஸக்தி ரேஷா நபகஸிதி நிஷண்ணா தாரயிஷ்யு த்வஸ்யம்' என்று அருளிச்செய்தார். தவிரவும், இதற்குப்பலமே இல்லாவிட்டாலும் இது ஸ்வயம் போக்யம். ஆகையாலேதான் ஸ்ரீ ப்ரஹ்லாதன் 'நாயயோநி ஸஹஸ்ரேஷு', 'யா ப்ரீதி ரவிவேகாநாம்' இத்யாதியில் ப்ரார்த்தித்தார். பக்தியை, ஸ்ரீ பாஷ்யகாரரும், 'ஸவதஉ ஐஐ வாஷிஸ் ஸெஐ ஷீ ஸக்திரதிவா' என்று அருளிச்செய்தார். 'நடிஸ்ய வணயநிவயெ ஐஐ ஸக்திரஸ்து' என்று ஓர் மஹாத்மா பக்தியை ப்ரார்த்தித்தார். ஆகையால், நாமெல்லாரும் பக்தியையே ப்ரார்த்திப்போம்.

303

ஸ்ரீ:.

ஸ்ரீமதே வகுளபூஷண மஹாதேசிகாய நம:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

# ஆழ்வார் ஆசார்யர்களின் திருநக்ஷத்ர ப்ரவசந ஸபையாரின் ப்ரதமவார்ஷிக மஹோத்ஸவம்.

மேற்கூறிய உத்ஸவம், சென்ற காளயுக்தி௵ பங்குனி௴ 21௳ (6—4—19) ஞாயிற்றுக்கிழமை, கோமளேஸ்வரன்பேட்டை ஸந்நிதித் தெருவில் வெகு விமர்ஸையாக நடைபெற்றது. பகல் 2½-மணிக்குமேல் அங்கத்தினரின் கூட்டத்தில், கீழ் அச்சிடப்பட்டிருக்கும் வர்ஷாந்த அறிக்கை படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. அதில் 4-வது பாராவில் குறிக்கப்பட்டபடி, ஸித்தார்த்தி௵ த்திய திருநக்ஷத்ரங்களில் உபநிஷத்துக்களில் ப்ரதிபாதிக்கப்படும் வித்யைகளைப்பற்றி உபந்யாஸங்கள் நடத்தலாமென்று நிச்சயிக்கப்பட்டது.

பகல் 3-மணிக்குத் திருவஹீந்த்ரபுரம் சேட்லூர் பகவத்விஷயம் வித்வான் ஸ்ரீ. உ.வே. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியை அக்ராஸநம் வஹிக்கும்படி ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் க்ருபைகூர்ந்து அக்ராஸநம் வஹித்தார். ஸ்வாகதத்திற்குப்பிறகு, அக்ராஸநாதிபதி, ஸபையின் விஷயங்களைப்பற்றிக் கொஞ்சம உபந்யஸித்து, 'ஸ்ரீ விஸிஷ்டாத்வைத ஸித்தாந்தமும், உபயவேதாந்தமும்' என்கிற விஷயத்தைப்பற்றி இரண்டு மணி அவகாஸம், கேட்பவர் நெஞ்சு உருகும்படி சொல்லமுதைச் சொரிந்தருளினர். இந்த ஸித்தாந்தம் ஒன்றுக்கே த்ராவிட வேதாந்தம் உபநிஷத்துக்கள் என்கிற இரண்டு கண்கள் உண்டென்றும், இவைகள் இரண்டும் ஒரே அர்த்தத்தை ப்ரதிபாதிக்கின்றன வென்றும் பரக்க நிரூபித்தருளினர். உபநிஷத்துக்களின் அர்த்த விசாரரூபமான ப்ரஹ்ம ஸூத்ரங்களை எடுத்துக்கொண்டு, அதில் 4-அத்யாயங்களிலும் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கும் அர்த்தங்களெல்லாம ஸ்ரீ பகவத்விஷயத்தில் அருளிச்செய்யப்பட்டவைகளே என்று பொதுவில் சொல்லி, பிறகு 16-பாதங்களிலும் க்ரமேண ப்ரதிபாதிக்கப்படும் அர்த்தங்கள் திருவாய்மொழியிலும், முதல் இரண்டு திருவாய்மொழிகளிலும் கடைசி மூன்று திருவாய்மொழிகளிலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன வென்று விவரித்தருளினர். இவற்றைக் கேட்டதனால் உண்டான ஆஹ்லாதம் ஸ்ரோதாக்களா யிருந்தவர்க

ளால் அநுபவிக்க முடிந்ததேயொழிய அதை வர்ணிக்க ஸாத்ய மானதன்று.

பிறகு ஸ்ரீ. உப. கெ. ராஜகோபாலாசார்யர் பீ-ஏ., பி-எல்., ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் நிலைமையைப்பற்றி உபந்யஸிக்க உபக்ரமித்து, இந்த ஸம்ப்ரதாயத்திற்கு ஸ்ரீமத் பகவத்விஷயம் அஸாதாரணம் என்று கொண்டாடி அங்குள்ள விஷயங்கள் யுக்திக்கு மிகவும் பொருந்தினவைகளென்று பல உதாஹரணங்களுடன் நிரூபித்து, தான் முதலில் அந்த க்ரந்தத்தை ஸாமாந்யமாக நினைத்திருந்து, பிறகு ஆசார்ய கடாக்ஷத்தினால் ஆழ்வார் ஸ்ரீஸூக்தியின் மஹிமையைக்கண்டதும் அதனால் தமக்கு உண்டான ஆதராதிசயத்தையும், திருவாய்மொழியின் அதிபோக்யதையையும் விசேஷமாக எடுத்துக்காட்டி, தான் பால்ய தசையில் அதை உபேக்ஷித்ததனால் இப்போது தனக்கு உண்டாகும் கஷ்டத்தை நிரூபித்து, இந்த ஸம்ப்ரதாயஸ்தர்கள் அனைவரும் காலதாமதமின்றி இதைக் காலக்ஷேபம்செய்ய ப்ரயத்நம் செய்யவேண்டு மென்றும் வற்புறுத்தினர். பிறகு, ஸ்ரீ. உப. என். ஸ்ரீநிவாஸாசார்யர் பி-ஏ., 'ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரம்' என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யஸிக்க ஆரம்பித்து, மதமென்பதற்கு அர்த்தபஞ்சக நிரூபணமே ப்ரதாநமென்றும், இவை தகுந்தபடி நிரூபிக்கப்படாததனால் மற்ற மதங்களின் அநாதரணீயத்வம் ஸித்தமென்றும், இவைகளை ஸரியாக நிரூபிக்கும் நம்மதமே ஸகல ஆஸ்திகர்களினாலும் விச்வஸிக்கத் தக்கதென்றும், அப்படி சித்சிதீச்வர தத்வங்கள், பரமஹிதம் பரமபுருஷார்த்தம் ஆகிற அவச்யம் ஜ்ஞாதவ்யங்களான அர்த்தபஞ்சகத்தைத் தெளிவாய் ப்ரதிபாதிப்பதனால், ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம் என்னும் க்ரந்தம் எல்லாராலும் ஆதரிக்கத்தக்க தென்றும், இக்ரந்தத்தை ஸகலரும் அநுபவிக்கும்படியாக எளிதான நடையில் வ்யாக்யாநத்தோடு ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ப்ரசாரண ஸபையார் * ப்ரசுரம் செய்யும் கைங்கர்யத்திற்கு அவரவர்களால் இயன்ற த்ரவ்ய ஸஹாயம் செய்யப்பட வேண்டுமென்றும் பரக்க நிரூபித்தார்.

வர்ஷாந்த அறிக்கையில் கண்டிருக்கிறபடியே இப்படிப்பட்ட ஆசார்ய கைங்கர்யமாகிற பரமபுருஷார்த்தத்தில் அந்வயிக்கும் திருநாமங்கள் மிகவும் ஸ்வல்பமாயிருப்பதனால் நாளது ஸித்தார்த்தி ஸ்ரீ திருநக்ஷத்ரங்களுக்காவது இன்னும் அநேகம் ஸ்வாமிகள் ஸேவை ஸாதிப்பார்களென்று நம்பப்படுகிறது என்கிற ப்ரார்த்தனையுடன் 6½ - மணிக்கு உத்ஸவம் முடிவுபெற்றது.

---

* இந்த ஸபையின் கச்சேரி விலாஸம்:—16, கோவில்தெரு, கோமளீச்சுரன்பேட்டை, சென்னை.

## (ஷை ஸபையின் காளயுக்தி ௵த்திய அறிக்கை.)

1. ஸ்ரிய:பதி முதலாக ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனளவாக உள்ள ஆசார்ய பரம்பரையில் அந்வயித்த ஆசார்யர்கள் க்ரந்தமுகேந உபகரித்தவர்கள். இவர்களின் திருவவதார தினங்களையும், மற்றும் இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு அஸாதாரணங்களான தினங்களையும், அநேகராகச் சேர்ந்து கொண்டாடுவதற்காக இந்த ஸபை சில பாகவதோத்தமர்களின் நியமநத்தினால் காளயுக்தி ௵ சித்திரை ௴ 10௳ (22—4—18) யில் ஏற்படுத்தப்பட்டது.

2. இந்த ஸபையின் கார்யத்தை நடத்துவதற்காக ஸ்ரீ உ.வே. சேட்லூர். பகவத்விஷயம் வித்வான் நரஸிம்மாசார்ய ஸ்வாமி ஸபாத்யக்ஷர்; ஸ்ரீ உ.வே. கோமடம் ரங்கஸ்வாமி அய்யங்கார்ஸ்வாமி கார்யதரிசி; கோமடம் ஸ்ரீநிவாஸய்யங்கார் உதவி கார்யதரிசியும் பொக்கிஷதாரரும். இப்படி ஒரு நிர்வாஹஸபை ஏற்படுத்தப்பட்டது. அந்தந்தத் திருநக்ஷத்திர தினங்களில் மாலை 6-30 மணிக்கு உபக்ரமித்து ஸேவை நடத்தப்பட வேண்டுமென்றும், பிறகு அன்றையதினம் திருவவதாரம் செய்தவர் விஷயமாக ஒரு உபந்யாஸமும், பிறகு சாத்துமுறையும் நடத்தப்படவேண்டுமென்றும் நிச்சயிக்கப்பட்டது. ஸபையின் அங்கத்தினரில் பெரும்பான்மையோர் லௌகிகத்திலிருக்கிறபடியினால், அவர்களின் ஸௌகர்யத்திற்காக இவை மாலையில் நடத்தும்படி ஏற்படுத்தப்பட்டது.

3. இந்த வர்ஷத்தில் இந்த ஸபையின் மொத்த வருமானம் ரூ. 66-13-6; செலவு ரூ. 63-6-8; கையிருப்பு ரூ. 3-6-10.

4. இந்த வர்ஷத்தில் அந்தந்தத் திருநக்ஷத்திர தினங்களில் அந்தந்த அவதாரவைபவம் உபந்யஸிக்கப்பட்ட படியினால் மறுபடியும் அதையே நடத்துவதைவிட, அவஶ்யம் அறியவேண்டிய அர்த்த விஶேஷங்களைத் தொடர்ச்சியாக ஒவ்வொரு திருநக்ஷத்திர தினத்திலும் ஸேவைக்கும் சாத்துமுறைக்கும் இடையில் ஒரு மணி அவகாஶம் நடத்தலாம் என்று தோன்றுகிறது. மேலும்,

இந்த அங்யாத்ருமமான ஸம்ப்ரதாயம் ஸரியாக ப்ரசாரணம் செய்யப்படாமையினால் அதிக்ஷீண தசையை அடைந்திருப்பது ஸகலரும் அறிந்த விஷயமே. இந்த நிலைமையைக் கூடியவரையில் சீர்திருத்துவதற்காக நம் சக்திக்கு அநுகுணமாக ப்ரயத்நம் செய்யவேண்டியது அத்யாவஶ்யமாயிருக்கிறபடியினால், ஸம்ப்ரதாயார்த்தங்களை அநேக இடங்களில் ப்ரவசநம் செய்யவேண்டும். இதற்காக ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்யும் விதத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும். இதையோசித்துச் சில சில காலக்ஷேப தினங்களில் பண்டிதர்களின் அக்ராஸநத்தின் கீழ்ச் சிலரைச் சில விஷயங்களைப்பற்றி உபந்யஸிக்கச் சொல்லி, அதில் மாற்றவேண்டிய அம்சத்தையும் மாற்றும் விதம் முதலியவைகளையும் கற்றுக்கொடுக்கவேண்டும். இவ்விரண்டு விஷயங்களிலும் ஸபையின் அங்கத்தினருக்கு ஸம்மதம் இருந்தால் அதற்குவேண்டிய ஏற்பாடுகளை நிர்வாஹ ஸபையார் செய்வார்கள்.

5. இந்த வருஷத்தில் அந்தந்தத் திருநக்ஷத்திரங்களில் நடத்தப்பட்ட உபந்யாஸங்களை ஸங்க்ரஹித்து ஒரு புஸ்தக ரூபமாக வெளியிடுவதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கூடிய சீக்கிரத்தில் அது வெளிவரும் முதலில் முதலாழ்வார்கள் வைபவமும் பிறகு க்ரமேண மற்றைய ஆழ்வார்களின் வைபவங்களும் ப்ரசுரம் செய்யப்படும். இவைகளை வாங்கி ஆழ்வார் ஆசார்யர்களின் சரிதங்களாகிய அம்ருதத்தைப் பருகும்படி ஸகலரும் ப்ரார்த்திக்கப்படுகிறார்கள். இந்த வருஷத்திற்போல, ஸித்தார்த்தி ௵ ஆழ்வார் ஆசார்யர்களின் திருநக்ஷத்திரங்களைக் காட்டும் குறிப்பு ஒன்று அச்சிடப்பட்டிருக்கிறது. அதன்விலை அணா இரண்டு. வேண்டியவர்கள் உதவி கார்ய தரிசியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

6. இந்த ஸபையின் அங்கத்தினர் என்பதைத் தெரிவிப்பதற்காக ஒரு சிஹ்நம் (Badge) ஏற்படுத்தப்பட்ட வேண்டுமென்று சிலர் அபிப்ராயப்பட, இந்தஸபையின் பெயருக்கநுகுணமாக ஆழ்வார்களுக்குள் ப்ரதாநரான நம்மாழ்வாருடையவும், ஆசார்யர்களுக்குள் ப்ரதாநரான ஸ்ரீதேஶிகனுடையவுமான உருவப்படங்களை அதற்கென்று செய்யப்பட்ட ஒரு வெள்ளி ஆபரணத்திலமைத்துத் தரிக்கலாமென்று தோன்றுகிறது. அப்படியே மாதிரியும் செய்யப்பட்டிருக்கிறது. அங்கத்தினருக்கு ஸம்மதமாகில் ஒவ்வொருவரும் ஒன்று வாங்கித் தரித்துக்கொள்ளலாம். விலை மூன்று ரூபாயாகும்.

நிர்வாஹஸபையார்.